# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 17 | 02-09-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 196


## தபால்கள் எடுத்துச் செல்ல கப்பல் கப்டன் மறுப்பு

பிளம்பயன் நோயாளிகள் கப்பலில் தபால் பொதிகளை ஏற்றிச் செல்ல கப்பல் கப்டன் மறுத்துள்ளார். வழமை போல் நேற்று இக்கப்பலில் தபால் பொதிகளை அனுப்புவதற்காக பருத்தித்துறை துறைமுகத்திற்கு தபால் பொதிகள் எடுத்து வரப்பட்ட போதிலும் இப்பொதிகளை

(11ஆம் பக்கம் பார்க்க)

# இன்றைய நிலைகளில் இருந்து ராணுவம் பின்வாங்க முடியாது

### படை அதிகாரிகள் மட்டத்தில் அபிப்பிராயம்

(கொழும்பு)

புதிய அரசாங்கம் பொருளாதாரத் தடையை நீக்கி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தாலும் இராணுவம் தற்போது நிலை கொண்டுள்ள இடங்களிலிருந்து பின்வாங்கப்போவதில்லை என இராணுவ உயர் மட்ட அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத் தடைநீக்கம் தொடர்பாக அறிவித்தலை வழங்கியதாகவும், இது தொடர்பாக பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா ஒரு தெளிவான விளக்கத்தை அளித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், பொதுஜன ஐக்கிய முன்னணியினர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளுக்குத் தாம் ஒத்துழைப்பு நல்குவதாகவும்,

(11 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் ரகசிய ஒப்பந்தம் எதையும் செய்யமாட்டோம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எந்த ஓர் இரகசிய ஒப்பந்தத்தையும் விடுதலைப் புலிகளுடன் தான் மேற்கொள்ளப் போவதில்லை என்று பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா படை அதிகாரிகளுக்கு உறுதியளித்துள்ளார்

நேற்று நடைபெற்ற வடக்கு கிழக்கு பாதுகாப்புப் படை அதிகாரிகளுடனான மாநாட்டின் போதே இக் கருத்தை தெரிவித்தார் மேலும் அவர் தெரிவிக்கையில், இராணுவத்தினரின் முழுமையான ஒத்துழைப்பு மற்றும் இராணுவ ஒற்றுமைமற்றும் ஆலோசனை தேவையென்றும் அதாவது இராணுவத்துடன் ஒன்றிணைந்து இச் சமாதான உடன்பாட்டை மேற்கொள்ளப் போவதாக தான் வலியுறுத்தி கூற விரும்புவதாக கூறினார்

(11ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயரதிகாரிளுடன் சந்திரிகா நேற்று பேச்சு

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நேற்று இராணுவ உயரதிகாரிகளுடன் யாழ். போர்நிலைவரம் குறித்துப்பரிசீலனை செய்துள்ளார்- வடபகுதிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டது பற்றியும் பரிசீலிக்கப்பட்டது-

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும்

(11ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி இராணுவ முகாம்களுக்கு சந்திரிகா விரைவில் விஜயம்

### முதலில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வருவார்

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க வடபகுதிக்கு இவ்வார இறுதியில் வருகைதரவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அங்கு அரசுப் படையினரை அவர் சந்திப்பாரென்றும், வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு வருகைதர உயர் இராணுவ அதிகாரிகளிடம் விருப்பம் தெரிவித்துள்ளாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடந்த உயர் இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பொன்றில், வடபகுதி நிலைமை பற்றி அவருக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இன்னும் ஓரிரு தினங்களில் வடக்கு- கிழக்கு இராணுவ முகாம்களுக்குச் செல்ல இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு சில மாத காலம் செல்லலாம்?

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் தொடர்பாக முடிவொன்று வருவதற்கு சுமார் மூன்று மாதங்களுக்கு மேல் செல்லும் என்றும் இதனை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலை சந்திரிகா அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தை மூலம் இதனை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான சாதகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டியிருப்பதாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக இராணுவத்தினரை பெரிய அளவில் திருப்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இராணுவத்தினரை முழுமையாக திருப்திப்படுத்தும் நோக்குடனான நடவடிக்கைகளை பிரதமர் விரிவு படுத்தியிருப்பதாகவும் இதன் ஒரு கட்டமாக பூநகரி கூட்டுப்படைத்தள தாக்குதல் சம்பவம் தொடர்பாக நடை

(11ஆம் பக்கம் பார்க்க)



கடலிலே காவியம் படைப்போம் ஒலி நாடாவின் முதற் பிரதியை அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடமிருந்து வீரச்சாவடைந்த கணேஸ் மாமாவின் மனைவி பெற்றுக் கொள்வதை மேலுள்ள படத்தில் காணலாம்

## கடற்புலிகள் ஒலிநாடா நேற்று வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் வெளியீடான, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'கடலிலே காவியம் படைப்போம்' பாடல் ஒலிப்பதிவு நாடா நேற்று யாழ். கைலாசபதி கலை அரங்கத்தில் வெளியிடப்பட்டது.

கடற் புலிகள் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி நளாயினி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைக்க, முதன்முதலாக கடற்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரனுக்கு பிரதி அமைச்சர் பதவி

(கொழும்பு)

நேற்று பிரதியமைச்சராக பதவியேற்றவர்களில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட சுயேட்சை உறுப்பினருமான பி. சந்திரசேகரனும் ஒருவராவார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் சார்பில், எஸ். எஸ் எம் அபூபக்கரும், எம் சி ஏ எம் ஹிஸ்புல்லாஹ்வும் பிரதி அமைச்சர்களாகியுள்ளனர். லங்கா சமசமாஜ கட்சி சார்பில் அத்தாவுட செனவிரத்னவும், இலங்கை கம்யூனிஸ் கட்சி சார்பில் சந்திரசிறி கஜதீரவும் பிரதி அமைச்சர்களாகியுள்ளனர்

(11 ஆம் பக்கம் பா ்க்க)

## பட்டதாரி வேலைவழங்கல் திட்டத்தில் மாற்றமில்லை

கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சினால் பட்டதாரிகள் பயிலுநர் வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் புதிய அரசாங்கத்தின் கீழ் தற்போதைக்கு எந்தவித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என தெரியவருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 6500 பட்டதாரிகள் பல்வேறு துறைகளிலும் ஒரு வருட கால பயிலுநர்களாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பெயரின் பேரில் அண்மையில் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இத்திட்டத்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### விற்பனைக்குண்டு

சிங்கர் டீப்பிரிசர் 300லீற்றர், 400 லீற்றர் (SINGER DEEP FREEZER 300LITRES, 400 LITRES)விற்பனைக் உண்டு. 27,(157/1)ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (9245)

### வைத்திய சேவை

வயிற்றுப் புண். இருதய சுவாச வியாதிகள். வாதம். வலிப்பு மாதவிடாய் கோளாறுகள். மகப்பேறின்மை. மூல, மூத்திர. தோல் வியாதிகள். Digital Electronic பரிசோதனைகளும் சிறந்த சிகிச்சையும் என பெயர் பெற்றது. இரெட்ணம் வைத்தியசாலை 129. ஸ்ரேஷன் றோட் யாழ்ப்பாணம். (9233)

### "வதிவிட வேளாண்மை"

துவரை, கீரை விதை கிடைக்கிறது. நல்லூர் தொழிற்றுறை மேம்பாட்டுக் கண்காட்சித் தொகுதி- மில்க்வைற் பகுதியில். மில்க்வைற் சோப் மேலுறை/மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப்பக்கற் 10 கொடுத்து விதைப் பக்கற் ஒன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளலாம்.
''மில்க்வைற்'' (சி 10212)

### மகாதேவா ஜோதிடம்

வியாழமாற்றம் விற்பனையாகின்றது - 140 செல்லர் வீதி. கல்வியங்காட்டுச் சந்தைக்கருகில் சோதிடரைச் சந்திக்கலாம். (9231)

### உங்கள் மணிக்கூடுகள்

நியாய விலையில் உங்கள் பழைய மணிக்கூடுகளை விற்கவும், தரமான மணிக்கூடுகளை வாங்கவும், உங்கள் அனைத்து மணிக்கூடுகளையும் முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் எம்மை நாடுங்கள்: றீகன் வாச்வேக்ஸ், (நிதித்துறை அருகாமை) 113, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (9261)

### வெளிவந்து விட்டது வியாழன் மாற்றம்

Prof T. சத்தியதாஸன் கணிப்பில் ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம் இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்து விட்டது. சீவம் நீதிக்கதைகள் 3, 4, 5, 6 ஆண்டு 5 கணிதம் தமிழ் 94 வினா விடைகள் (சி-10101)

### பலனறிய முந்துங்கள்

விற்பனையாகிற ! ''விண்ணில் வியாழ மாற்றம் மண்ணில் உங்கள் யோகபலன்'' எல்லா இராசிகளுக்கும் ஒரே நூலில் பலனறிய-ரூபா பத்து மட்டுமே. வேலணை ஜோதிடர் V. A. சிவராசா 152 B, அரசடி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். (9257)

### நீங்கள் சுவைக்கவில்லையா?

மணலாறு கச்சான் அல்வா. சுத்தமானது, சுவையானது. அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர் பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம் சம்பியன்லேன் கொக்குவில் எல்லா இனிப்புவியாபாரிகளிடமும்பெற்றுக் கொள்ளலாம். (9264)


# நினைவு கூருகின்றோம்...

## 02. 09. 1994 ..

1985 ம் ஆண்டு இந்த தினத்தில் முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **குழந்தை** ( - ராமசாமி - கண்டி )

1987 ம் ஆண்டு மன்னார் - பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**டென்சில்** (சூசை மனுவேல் மிக்கேல் - மடுக்கோயில் - மன்னார்)

1989 ம் ஆண்டு மணலாறு - குமுழமுனைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த,

**2-ம் லெப். வரதேயன்** (பாலசிங்கம் யோகேஸ்வரன் - 1ம் படிவம், கல்மடு - வவுனியா)

இதே ஆண்டு கொற்றாவத்தையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சூரன்** (அருணாசலம் சுரேந்திரதேவர் - யாழ்ப்பாணம்)

1990 ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அ ரன்- சிவா** (கனகசபாபதி கனகராஜ் - விநாயகபுரம் - துணுக்காய்)

**2-ம் லெப். வசி** (சுப்பிரமணியம் கனகேஸ்வரன் பாலையடி, விநாயகபுரம் - துணுக்காய்)

**2-ம் லெப். சாரதி** ( இரத்தினம் கேதீஸ்வரன் - 12ஏ 2-ம் படிவம் - வவுனிக்குளம்)

**மிரேஸ்- நிரேஸ்** (செல்வராசா சிறிதரன் - கொக்கிளாய் - மணலாறு )

**இல்மன்** (அரியரத்தினம் ஜீவரத்தினம் - பன்றிக்கெய்த குளம், ஓமந்தை - வவுனியா)

**பாலேஸ்** ( - - புளியங்குளம் - வவுனியா)

**நித்தி** (சுப்பிரமணியம் சிவகுமார் - காந்திக்கிராமம், கோணாவில் - கிளிநொச்சி)

**மிரேஸ்** (சிவலிங்கநாதன் சிவசங்கர் - கொத்தங்கலட்டி - வல்வெட்டித்துறை)

**ஆப்தீன்** (பாலசிங்கம் மோகனதாஸ் - மந்திப்புலம் - கொக்குவில் யாழ்)

**துஷ்யந்தன்** - (சின்னராசா உதயராசா - சிறிமுருகன் குடியேற்றம், வல்வெட்டித்துறை

முல்லைத்தீவு - சி. டபிள்யூ சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். பொஸ்ரின்** (காளியப்பன் சுந்தரராஜ் - 9ம் கட்டை, பரப்பாங்கண்டல் - மன்னார்)

திருமலை - தம்பலகமம், பாலம்போட்டாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சுமிந்தன்** (விஜயபாகு விஜயகுமார் - தம்பலகமம் - திருமலை)

**கபில்** (வாசுதேவன் பரமேஸ்வரன் - தம்பலகமம் திருமலை)

யாழ் - கஸ்தூரியார் வீதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த,

**கப்டன் ரவி** (மாசிலாமணி ரவிச்சந்திரன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்)

**சின்னஅக்காச்சி** (பஞ்சலிங்கம் தயானந்தன் - நீர்வேலி தெற்கு - யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் வெடிமருந்துப் பொதிகளை படகில் ஏற்றி வந்து கொண்டிருந்த போது சிறிலங்காக் கடற்படையினரின் முற்றுகையின் போது தனது படகினை வெடிக்கவைத்ததன் மூலம் வீரச்சாவெய்திய,

**கப்டன் மோகன் -மேத்திரி** (காசிநாதன் நகுலேஸ்வரன் - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

1991 ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**அமல்** (கந்தசாமி ராஜ்குமார் - அக்கரைப்பற்று - அம்பாறை)

**கோவிந்தன்** (சிவலிங்கம் தெய்வேந்திரன் - விநாயகபுரம், திருக்கோயில் அம்பாறை)

**றோகினராஜ்** (சின்னத்தம்பி புஸபராசா - தும்பங்கேணி - மட்டு)

**நடேசதேவன்** (தம்பிராசா ஏரம்பமூர்த்தி - திருப்பழுகாமம் - மட்டு)

**சுந்தரேஸ்** (சின்னத்தம்பி சபாரத்தினம் - கொக்கட்டிச்சோலை மட்டு)

**லெப். இந்திரன்** (மரியதாஸ் மரியலூயிஸ் - சாம்பல்தீவு - திருமலை)

**செந்தூரன்** (முருகேசு சுபாஸ்கரன் - அன்புவழிபுரம் - திருமலை)

**பரணி** (பரஞ்சோதி புவனேஸ்வரன் - நிலாவெளி - திருமலை)

**சுமித்திரா** (தர்சினி நடராசா - திருமலை)

**லெப். கனகன்** (நாகலிங்கம் பாலேந்திரன் - 20, உருத்திரபுரம் - கிளிநொச்சி)

**மாதுலா** (கலாதேவி நல்லதம்பி - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

**கப்டன் கண்ணன்** (தங்கசாமி கேசவன் - ஆண்டான்குளம், அடம்பன் - மன்னார்)

**அமுதன்** (இராசதுரை சிவகுமார் - பல்லவராயர் கட்டு, முழங்காவில் - மன்னார்)

**2-ம் லெப். விஸ்வம்** (வீரசிங்கம் சிவராஸ் கோண்டாவில் கிழக்கு - யாழ் )

**2-ம் லெப். டெனி- கண்ணன்** (செல்வராசா சுதர்சன் - மீசாலை - சாவகச்சேரி)

**கவாஸ்கர்** (கனகசபை சுமித்திரன் - சிறுப்பிட்டி மத்தி நீர்வேலி - யாழ்)

**குமிழன்** (ஞானமனோகரன் கிருஷ்ணரூபன் - ஏழாலை வடக்கு - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும் இந்தியப்படையினராலும்கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மக்கள்

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10218)

ஐ. தே. கவிற்கு வாக்களித்த

# மனைவியை வீட்டைவிட்டு துரத்திய கணவன்

(கொழும்பு)

தனது சொல்லுக்கு கட்டுப்படாமல் மனைவிஐ தேகவுக்கு வாக்களித்ததால் கோபமுற்ற கணவர் மனைவியை வீட்டைவிட்டுத் துரத்தியசம்பவமொன்று தென்னிலங்கையில் இடம்பெற்றுள்ளது: தமது கணவர் தம்மைக் கொலை செய்து விடுவாரோ என்று அஞ்சிய மனைவி தமது இரு பிள்ளைகளுடனும் காடு ஒன்றினுள் மூன்று தினங்கள் மறைந்து இருந்த பின்னர் பொலிஸ் நிலையம் திரும்பினார்-

பின்னர் பொலிசார் தலையிட்டு இருவருக்கும் இடையே அமைதியை ஏற்படுத்தியுள்ளனர்,


## விற்பனைக்கு

கடற்புலிகளின் வெளியீடான

**கடலிலே காவியம் படைப்போம்**

ஒலிப்பதிவுநாடா மொத்தமாகவும் சில்லறையாகவும், எம்மிடம் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:-

**மின்வளம்**

இல. 81, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.
(சி0229)


## 3ம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்



அன்னை மடியில்
சேயாக
13. 06. 1975

மணலாற்று மண்ணில்
மாவீரனாக
02. 09. 1991

### 2-ம் லெப். டெனி / கண்ணன்
(செல்வராசா சுதர்சன்)

செந்தணல் என்னும் வீரமது கொண்டு
உன் தமிழ் காத்து உன்னதம் கண்டாய்.
பைந் தமிழ் என்னும் பழந்தமிழ் வேட்கை
தமிழ் ஈழமதில் கண்டு வாழ வேண்டு மென்றாய்
கொண்ட கொள்கையோடு மணலாற்றில் சமரிட்டாய்
எதிரிப் படை கலங்க எதிர்த்துச் சமர் செய்தாய்.
பேச்சும் மூச்சும் இந்த மண்ணிற்கே என்றாய்
வீரம் கொண்ட உன் வழியில் தமிழீழம் பிறக்கும்.

என்றும் உன் நினைவுடன்,
**குடும்பத்தினர்**

சுதர்சன் வீதி,
வாதையடி,
மீசாலை. (9236)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

# தமிழீழ பொருண்மிய ஆற்றலை வெளிப்படுத்தும் த. பொ. மே. நிறுவனத்தின் நல்லூர் காட்சியகம்

தமிழீழ பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்குடனும், தமிழீழத்திற்கு அப்பால் பெறப்படும் பொருள்களுக்கான மாற்றீட்டைக் கண்டுபிடிக்கவும், தமிழீழ மக்கள் மீதான பொருளாதாரத் தடையை சவாலாக ஏற்றும் அவற்றிலிருந்து விடுபடுவதற்குமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஊக்கத்துடன் உழைத்து வருகின்றது.

இந்நிறுவனம் தமது தேடல்களை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காகவும், தமது எதிர்காலத் திட்டங்கள் பற்றிய மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் நல்லூர் ஆலயப் பின்புறத்தில் காட்சியகம் ஒன்றை நிறுவியுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் காட்சியகத்தினை பள்ளிச் சிறுவர் முதல் பெரியோர்வரை அனைவருமே பார்வையிடுவதுடன் அவை ஒவ்வொன்றும் பற்றிய விபரங்களையும் ஆர்வத்துடன் கேட்டு அறிந்து கொள்வதை அவதானிக்க முடிந்தது.

### காடழிந்தால் நாடழியும்

அங்கே நுழைவாயிலின்முன் புறத்தே துவிச்சக்கர வண்டியில் விறகுகளை வெட்டி கட்டிக் கொண்டு வந்த இருவர் வீதியில் தரித்து நின்று ‘விறகெல்லாம் வெட்டி முடிந்து விட்டதே இனி எங்கே விறகிற்குப் போவோம்’ என தமக்குள்ளேயே ஆலோசிப்பது போன்ற உருவங்கள் காட்சி தருகின்றன. இதனைப் பலரும் கூடிநின்று பார்த்து ரசிப்பதும் பரிதாபப்படுவதும் வழக்கமாகி விட்டது.

இந்நிறுவனத்தினர் தமிழீழத்தில் உள்ள மரங்கள் ஒவ்வொன்றையும் உயிருக்கும் மேலாக மதித்துக் காத்து வருவதை உணர முடிகிறது.

தமிழீழத்தில் வனவளத்தைப் பாதுகாத்து எதிர்காலத்தில் ஏற்படும் பிணக்குகளுக்குத் தீர்வு காணும்வகையில் பலவிதமான, பெரியளவிலான ‘கட்அவுட்’களும் மக்கள் பார்வைக்கென வைக்கப்பட்டிருப்பதுடன் இலகுவில் வளரக் கூடிய பலவிதமான மரங்களையும் காட்சிக்கு வைத்துள்ளனர்.

### வளம்மிக்க தமிழீழம்

உட்கட்டுமானப் பகுதியினர் தமிழீழத்தின் கல்விமான்களையும் தேசாபிமானிகளையும் இணைத்து எதிர்காலத் தமிழீழத்தினை வரையறுத்துள்ளனர். செல்வோர் அனைவரையும் பிரமிக்க வைக்கிறது இவ் உட்கட்டுமானப் பகுதி. தமிழீழத்தினை இருபது மாநிலங்களாக வகுத்து அவ் இருபது மாநிலங்களுக்கும் பிரதான நகரங்களையும் குறிப்பிட்டுள்ளனர். இவை பிரதேசங்களின் பரப்பளவு, சனத்தொகை ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக வலயங்களாக வகுத்துள்ளனர்.

தமிழீழ வரைபடங்களில் மாநிலங்கள் தோறும் அமையப் போகும் கடல் போக்குவரத்தும் அதன் துறைமுகங்களும், மின் உற்பத்தி நிலையங்கள், தெருக்கள், கரையோர தெருக்கள் புகையிரத பாதைகள், சர்வதேச மற்றும் உள்ளூர் விமான நிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் போன்றன குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் மாநிலங்கள் ஒவ்வொன்றினதும் இயற்கை வளம், தொழில்நுட்ப அறிவு, தொழிலாளர் வலு ஆகியனவற்றை முழுமையாகப் பயன்படுத்தி கைத்தொழில் மையங்களும் சந்தைகளும் அமைப்பதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. எதிர்காலத் தமிழீழம் பற்றிய மக்களின் அபிப்பிராயங்களுக்காகவும் மேலதிக ஆலோசனைகளுக்காகவும் இவர்கள் காத்திருக்கின்றனர்.

### துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டம்

இதைவிட பாரிய அளவிலான நன்னீர் திட்டம் ஒன்றையும் வகுத்துள்ளனர். தற்போது தமிழீழம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று தான் இந்த நன்னீர் பிரச்சினை இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் ‘துரித நீர்வளமேம்பாட்டுத்திட்டம்’ ஒன்றினை மேற்கொள்ள உட்கட்டுமானப் பணியினர் உத்தேசித்துள்ளனர். இதன் முதல் கட்டமாக யாழ் நீரேரி அபிவிருத்தித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத் திட்டம் நிறைவேற்றப்பட ஐந்து ஆண்டுகள் பிடிக்கும் எனவும் பூர்த்தியானதும் காரைநகர் முதல் நெடுங்கேணி வரையான மக்களுக்கு குடி நீரை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இத்திட்டத்தினையும் இவர்கள் மிகவும் அழகாக சித்தரித்து மக்களின் ஆலோசனைக்காக வைத்துள்ளனர். இத்திட்டம் குறித்த அனைத்து விபரங்களும் வழங்கப்படுகின்றன, இத்திட்டம் நிறைவேறுவதற்கு இரண்டு பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்குகின்றனர். அதில் ஒன்றுதான் நிதிப்பிரச்சினை. 183 கோடி ரூபா செலவு ஏற்படும் என திட்டமிடப்பட்டுள்ள போதிலும் அவர்கள் மக்களிடமிருந்து இதற்கான நிதியை கோரவில்லை. மாறாக அபிவிருத்திக்கு வருடம் தோறும் கிடைக்கும் நிதியை மற்றைய தேவைகளுக்கு பயன்படுத்தாது இத்திட்டத்திற்கு மட்டுமே செலவிடுவதன் மூலம் ஐந்து ஆண்டுகளில் இலக்கினை அடைந்து விடலாம் என்கின்றனர். இதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை நல்குவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றையதுஏரிகளை நன்நீராக்கும் போது கடல்தொழில் பாதிக்கப்படும் இவ்வாறு பாதிக்கப்படுவோர் வேறு இடங்களில் சென்று தொழிலை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் இறால் வளர்ப்பு, நன்நீர் மீன் வளர்ப்பு போன்றவற்றையும் ஊக்குவிக்கக் கூடியதாக இருக்கும்.

இந்நீரேரியை நன்நீராக்குவதன் மூலம் போக்குவரத்து மற்றும் குடியேற்றத் திட்டங்களையும் அப்பகுதியில் மேற்கொள்ளலாம் எனவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுமானப் பணியினர் சீமெந்திற்குப்பதிலாக சுண்ணாம்பினை பயன்படுத்தி கட்டிடங்களை அமைக்கும் முறை குறித்து மக்களுக்கு விளக்கம் கொடுக்கின்றனர். சீமெந்திற்கு மாற்றீடாக பயன்படுத்தப்படும் சுண்ணாம்பால் அமைக்கப்பட்ட பலகட்டிடங்களின் மாதிரி அமைப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

### உல்லாச புரியாகும் யாழ்ப்பாணம்

இவற்றை விட யாழ் நகரப் பகுதியை நவீன வசதிகள் கொண்ட சிறந்த நகரமாக்குவதற்கான திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ் மத்திய பேருந்து நிலையம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு பஸ்கள், ஆட்டோக்கள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் தரிப்பிடங்கள் தனித்தனியே அமைக்கப்படவுள்ளன.

சசிகரன்

ஆரியகுளம், பத்து லட்சம் செலவில் பொழுதுபோக்கு வலயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் குளம் புனரமைக்கப்பட்டு சிறுவர்கள் உல்லாசமாக பொழுதைக் களிப்பதற்கான படகு சேவைகளும் அறிமுகப் படுத்தப்படவுள்ளன.

பழைய பஸ் நிலையம் நகரப் பூங்காவாக மாற்றி அமைக்கப்படவுள்ளது. இதில் பாரிய மரங்கள் வளர்க்கப்பட்டு இயற்கை போன்ற அழகை ஏற்படுத்த இருப்பதுடன் மக்கள் தரிப்பிடமும் அமையவுள்ளது இவற்றின் மாதிரி அமைப்புகளும் அங்கேயுள்ளன.

விவசாயப் பகுதியில் தமிழீழ மண்ணின் வகைகளும் பயிரிடக் கூடிய பயிர்கள், பெற்றபலாபலன்கள் போன்றனவும் மரக்கறி வகைகளின் உற்பத்தி, அவற்றால் பெறப்பட்ட மேலதிக நன்மைகள் போன்றன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடல் வளம் குறித்தும் விளக்கம் கொடுக்கப்படுகிறது. தமிழீழத்தின் முக்கிய வளங்களில் ஒன்றான கடல் வளத்தை முழுமையாக பயன்படுத்துவோமாயின் பெருமளவு அன்னியச் செலாவணியை எதிர்காலத்தில் ஈட்டிக் கொள்ளலாம் என்பதனை உணர முடிகின்றது. அலங்காரப்பொருட்கள்முதல்அன்னிய செலாவணி வரை இக்கடல் வளம் எம்மை வளப்படுத்துகிறது என்பதை அங்கே காண முடிந்தது.

ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையின் மாதிரி அமைப்பு அனைவரையும் கவர்ந்து நிற்கிறது. ஓடு உற்பத்தி குறித்தும் அதன் செயற்பாடுகள் குறித்தும் பூரண விளக்கம் கொடுக்கப்படுகிறது. உற்பத்தி அதிகம் இருந்தும் போக்குவரத்து வசதி இன்மையால் அவற்றை இங்கு சந்தைப் படுத்த முடியாதிருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்கென பாரியளவிலான படகு ஒன்று உற்பத்தி செய்யப்படுவதாகவும் விரைவில் அதன் மூலம் குடாநாட்டுக்கு ஓட்டினை தருவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

### கைத்தொழில் சந்தை 1994

தியாகி திலீபன் நினைவு தூபியை அண்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் இச் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. நுழைவாயிலில் தமிழீழம் வரையப்பட்டுள்ளது. இதில் இருபது மாநிலங்களாக வகுக்கப்பட்டு நாற்பது கைத்தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சிலமட்டுமே செயற்பட்டுக் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. இச் சந்தைப் பகுதியில் தென் பகுதி உற்பத்திக்கு ஈடாக தமிழீழத்தில் உற்பத்திசெய்யப்பட்ட பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களும் கண்காட்சிக்கும் விற்பனைக்குமாக வைக்கப்பட்டுள்ளன. குளிர்பானம் முதல் இரும்பு உருக்கு உற்பத்திவரை இதில் அடங்கியுள்ளன.

### உப்பில் தன்னிறைவு

ஆனையிறவு உப்பளம் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளானதைத் தொடர்ந்து குடாநாட்டில் உப்பிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை அடுத்து குடாநாட்டில் உப்பு உற்பத்திசெய்யும் முயற்சி தீவிரமாகியது. 1992 இல் 28,850 கிலோகிராம் உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது 1994 ஆனி வரைமட்டும் 13 லட்சத்து 14 ஆயிரத்து 627 கிலோ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது வடபகுதிக்கான உப்பின் தேவையை விட ஆறுமாதங்களுக்கு மேலதிகமானதாகும். இதனால் இரு இடங்களில் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதுடன் சிறிலங்காவிலிருந்து உப்பின் இறக்குமதியும் தடை செய்யப்பட்டுள்ளமை பெருமைக்குரியதே.

### தும்பு உற்பத்தி

வடதமிழீழத்தில் தும்புஉற்பத்தி தற்போதைய தேவையில் 15 வீதத்தினை மட்டுமே பூர்த்தி செய்கிறது. இதற்கான மூலப் பொருளை பெற்றுக் கொள்வதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதே காரணம் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. இருப்பினும் தும்பின் மூலம் துடைப்பம் முதல் கயிறுவரை உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது.

### விலங்கு வேளாண்மை

விலங்கு வேளாண்மை குறித்த முழுமையான விளக்கங்களும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. வன்னி மண்ணில் விலங்கு வேளாண்மையில் தன்னிறைவு காணப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்களுடன் விளக்குகிறார் இப் பிரிவின் பொறுப்பாளர்.

இவர் இதுபற்றி விபரிக்கையில் வன்னி மண்ணிலே மனித தேவையிலும் பார்க்க கூடியளவு வளங்கள் பயனற்றுக் கிடக்கின்றன. இங்கே வரண்ட பிரதேசத்தில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் உடலை வருத்தி உழைத்தும் போதிய பலனைப் பெற முடியாதுள்ளது. இங்குள்ள உழைப்பாளிகள் தமது இத்தகைய முயற்சிகளை வன்னிமண்ணிலேவந்து பிரயோகிப்பார்களேயானால் தாராளமாக வருவாயைப் பெற்றிட முடியும். சகலதும் மலிவாகக் கிடைக்கிறது. நிலவளம் உண்டு, நீர்வளம் உண்டு; இதற்கு மேல் உற்பத்திக்கு என்ன வேண்டும்? எமது மக்கள் கூட்டு வாழ்க்கையை உதறிவிட்டு வளங்கள் உள்ள பிரதேசங்களை நாடி அங்கு குடியேறி உழைப்பதன் மூலம் தமிழீழம் தன்னிறைவடையும் என்றார் பெருமிதத்துடன்.

### பொருளாதார தடையை உடைத்திடும் சக்திப் பகுதி

காற்றாலே நீரிறைப்போம்
கடலலையால் மின் எடுப்போம்

தோற்காத போராட்டம் தொடர்ந்து

ஒரு நாளில் தாயக வளங்களால் தாயகம் மீளும்.

என்ற இறுமாப்புடன் நிமிர்ந்து நிற்கிறது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதி. சிறிலங்கா அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையால் செயலிழந்துள்ள தமிழீழ மண்ணுக்கு உரம் சேர்த்து நிற்கிறது. ஆக்கிவாயு மூலம் மோட்டார் வாகனங்களை இயங்கச் செய்யவும் பெற்றோமக்ஸ் ஒளிரச் செய்யவும் நீர் இறைக்கும் இயந்திரங்களை இயக்கவும் முடியும் என்பதை நிரூபித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் 1940ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் போர் மேகம் சூழ்ந்திருந்த வேளை உயிர்ச்சுவட்டு எரிபொருள் (பெற்றோல்) மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து எடுத்துவர முடியா நிலை ஏற்பட்ட போது இதற்குபதிலாக இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றின் மூலம் அங்கே வாகனங்கள், புகையிரதங்கள், மீன்பிடிப் படகுகள், மரம் அரியும் ஆலைகள், மா அரைக்கும் ஆலைகள் ஆகியன இயக்கப்பட்டன என்பதை இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தப்பாடுடையதாகும். காற்றாலை அமைப்பதன் மூலம் எதிர்காலத்தில் யாழ் மாவட்டத்திற்கு தேவையான மின்சாரத்தை பெற்றுக் கொள்ளலாம். இதற்கான காற்றுப் பண்ணையின் மாதிரி அமைப்பும் மக்கள் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலாக இன்றைய சிறார்கள் மின்சாரம் இன்மையால் பெரும் உளரீதியான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். இதனைத் தவிர்த்து சிறார்களை மகிழ்விக்கபொறிமுறைகளையும் மனித சக்தியையும் ஒன்றிணைத்து ராட்டினங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிறுவர் முதல் வயோதிபர் வரை இவற்றில் ஏறி உல்லாசமாக சுற்றி வருவதை பெருமளவு மக்கள் குழுமி நின்று பார்த்து மகிழ்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவை இயந்திரசாதனமின்றி மனித சக்தியை இலகுவாக பயன்படுத்துவதன் மூலம் இயக்கப்படுவதை அவதானிக்க முடிந்தது.

மொத்தத்தில் இவற்றை எல்லாம் சுற்றிப் பார்க்குமிடத்து எம் தமிழீழம் அனைத்துவளங்களும் நிறைந்த ஒரு சொர்க்க பூமி என்பதில் ஐயமில்லை.

# ஐ. தே. கவின் ஆட்சியை நீடிக்க சதியில் இறங்க முற்பட்ட இராணுவம்

ஆகஸ்ட் 16-ம்திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியைத் தழுவிக் கொண்டதும் மறுநாள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசமைப்பதற்கு முன்னர் புதிய அரசினை இராணுவ சதி முயற்சி ஒன்றின் மூலம் கவிழ்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததை இராணுவ உயர் பீடங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஆகஸ்ட் 17 ஆட்சி மாற்றம் நடைபெறுவதற்கு முன்னதாக தீட்டப்பட்டிருந்த இச்சதித்திட்டத்தின் முழு நோக்கமும் ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்த சிறிலங்காவின் ஆட்சியானது பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் செல்வதைத் தடுப்பதேயாகும்-

இராணுவத்தினரில் ஒருபகுதியினரின் ஒத்துழைப்புடனும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினருடனும் கூட்டுச் சேர்ந்து இச் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மக்கள் ஆட்சி மாற்றம் ஒன்றை விரும்பி இருந்த வேளையில் இவ்வாறான ஓர் சதி மூலம் தமது இலாபங்களை தொடர்ந்து அனுபவிக்கலாம் என்ற எண்ணத்தில்- இராணுவ- ஐ-தே-கட்சியின் அணிகள் செயற்பட்டன.

இந்த இராணுவ சதித்திட்டம் முதலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவிற்கு 16-ம் திகதி இரவு எட்டியதும் அவர் உடனடியாகவே இராணுவ தலைமைச் செயலகத்திற்கு விரைந்தார், இவரைத் தொடர்ந்து தகவல் கிடைத்ததும் இராணுவத்தளபதிஜெரிடிசில்வாவும் அங்கு வந்து சேர்ந்தார்.

16-ம் திகதி இரவே தலைமைக் காரியாலயத்தைச் சென்றடைந்த இருவரும் இராணுவ சதி குறித்து இராணுவ புலனாய்வுப் பிரிவு கொடுத்த தகவல்களை ஆராய்ந்து சதித்திட்டத்தை முறியடிப்பது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் விரைவாகவும் நிதானமாகவும் மேற்கொண்டனர். இச்சதித்திட்டத்தின் பின்னணியில் செயல்பட்ட அதிகாரிகள் பற்றிய முழுமையான தகவல்களைத் திரட்டிக் கொண்டதுடன் நடவடிக்கைக் கட்டுப்பாட்டுப் பிரிவைத் தமது நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்தனர். தலைமை அலுவலகத்தில் கடமையில் இருந்த சகல தரத்தினரும் உடனடியாக மாற்றப்பட்டனர். இராணுவ தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு அணிகளும் மாற்றப்பட்டு இராணுவ பொலிஸ் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்கள் பயணம் செய்யும் வாகனங்கள் மற்றும் பாதைகள் அனைத்துமே மாற்றப்பட்டன.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த போது இச் செய்தி சந்திரிகா குமாரணதுங்காவிற்கு எட்டியது. அவர் இச்சதித்திட்டத்தை முறியடிப்பது தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாகமேற்கொள்ளுமாறு இராணுவத்தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதன் போது பாதுகாப்பு அமைச்சு மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தவிர்ந்த ஏனையோரை உடனடியாக கொழும்பை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்தது இவ் உத்தரவிற்கு அமைய கேணல் கொரதெனியா பூநகரிக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கடமையின் நிமித்தம் கொழும்பு வந்த பிரிகேடியர் சரத் பொன் சேகா யாழ்ப்பாணத்திற்கும் உடனடியாக திருப்பி அனுப்பப்பட்டனர். இதேவேளை லெப். கேணல் சொய்சா மன்னாருக்கும் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து சதித்திட்டம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது.

## சதித்திட்டம்

தாய்லாந்தில் இருந்து தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன்னதாக கொழும்பு திரும்பியசிசில் வைத்தியரட்ணாவே இச்சதித்திட்டத்தை தீட்டியதாக கூறப்படுகின்றது. திட்டத்தை வகுத்துக் கொடுத்த சிசில் தான் இங்கு தங்கியிருக்காது உடனடியாகவே இந்தியா சென்று அங்கு தங்கிக் கொண்டார்.

இவரது திட்டத்தின்படி இதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் தாம் தேர்தல் அன்று இரவு இராணுவ தலைமையகத்தை விட்டு வெளியேறியே சதித்திட்டத்தை ஆரம்பிக்க இருந்தனர்.

இவ்வாறு வெளியேறும் இவர்கள் மறுநாள் காலை தலைமை அலுவலகத்தை நோக்கி வரும் வழியில் இராணுவத்தளபதி ஜெரி டிசில்வாவையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்காவையும் இராணுவ தலைமை அலுவலகத்திற்கு வெளியே வைத்து கொலை செய்வதென முடிவு செய்யப்பட்டிருந்தது.

இச்சதி நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பின்னர் இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் சிசில் வைத்திய ரட்ணாவையும் இராணுவத்தளபதியாக லக்கி அல்கமவையும் நியமிக்குமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் வேண்டுகோள் விடுப்பது எனவும் திட்டமிட்டிருந்தனர்.

ஜனாதிபதி தமது இவ் வேண்டுகோளை வேறு காரணங்களைக் காட்டித் தட்டிக் கழிப்பாரேயானால் ஜனாதிபதிக்கு அரசியல் ரீதியாக அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் ஊடாகவும் இராணுவ ரீதியாகவும் அழுத்தம் கொடுக்கவும் திட்டமிட்டிருந்தனர் இதன் முன்னேற்பாடாகவே முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே தமது வெளிநாட்டுப் பயணத்தை குறுகிய காலத்தில் முடித்துக் கொண்டு அவசரஅவசரமாக கொழும்பு திரும்பியதாகவும் கருதப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலை உருவாகுவதால் ஆகஸ்ட் 18அல்லது 19ஆம் திகதிகளில் முன்னாள்இராணுவத்தளபதி சிசில் வைத்தியரட்ணாவின் யுத்தகால சேவை ஆலோசகராகவும் யுத்தப்பிரிவில் கடமையாற்றிய வருமான இராணுவ தொழில் நுட்ப சேவை அணியின் தலைவர் லெப்-கேணல் எம், ஆர். டபிள்யூ. சொய்சா வீட்டில் இராணுவத் தலைமைஅதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, மேஜர் மல்லிமாராய்ச்சி, யாழ் மாவட்ட பொறுப்பாளராகக் கடமையாற்றிய பிரிகேடியர் சரத்பொன்சேகா, யாழ் மாவட்ட ஒன்பதாவது டைப்பிரிவுத் தளபதியாக இருந்த கேணல் காமினி குணசேகர உட்பட வேறுசிலரும் சேர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வதெனவும் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிய வந்துள்ளது. இதே வேளை இத்திட்டம் குறித்து மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதாகவும் சில தகவல்கள்வெளியாகியுள்ளன.

தகவல்: ''யுக்திய''

# வை. க. தவமணிதாசனின் 'வைகை' ஒரு நோக்கு!

'எங்கள் மண்ணின்
மைந்தர்கள் மனது
எஃகையும் விடவும்
இறுக்கமானது'

கவிஞர் சொல்லும் இந்த மண்ணின் மைந்தர்கள் உறுதியானவர்கள், உன்னதமானவர்கள். உறக்கத்தை விரும்பாதவர்கள். தொட்டால் தீயாய்ச் சுட்டுப் பொசுக்கக் கூடியவர்கள்.

புரட்சிக்கு புறப்பட்ட இந்த இளைஞர்களின் இலட்சியம் எஃகையும் விடவும் இறுக்கமானது.

ஆளும் எதேச்சதிகார வர்க்கம் துப்பாக்கிக்கு அடுத்ததாக பேனாவிற்கு அஞ்சுகிறது துப்பாக்கிக்கு அடுத்ததாக எழுச்சி பூர்வமான கவிதைக்கு அதிக சக்தி உள்ளது.

அதனாற்றான் அடக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வாழ்வின் சுதந்திர மூச்சை உள்ளிழுக்க முடியாமல் அவதிப்படும் மக்கள் குழு எந்தளவு உத்வேகத்துடன் எழுச்சியடைவதை ஆளும்எதேச்சதிகாரவர்க்கம் விரும்பவில்லையோ அந்தளவிற்கு அந்த நசுக்கப்படும் குழுவிலிருந்து வெளிவரும் இலக்கிய படைப்புகளையும் அந்த வர்க்கம்விரும்பவில்லை.

இந்த மண்ணில் விடுதலைக்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது இக்காலத்தில் எழுச்சிக் கவிதைகளின் வரவு தவிர்க்க முடியாதது.

வை. க. தவமணிதாசன் சமீபத்தில் 'வைகை' என்ற கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். ஓவியர் ரமணியின் ஓவியத்தில் அட்டைப்படம் மிகச் சிறப்பாக உள்ளது. மக்களின் வாழ்நிலையை அந்த அட்டை ஓவியம் சித்திரித்துக் காட்டுகின்றது.

கவிஞன் உணராத உணர்வுகளையும் எண்ணிப்பாக்காத கருத்துக்களையும அவன் படைப்பில் வாசகன் காண்பதுண்டு என்பது உண்மையே

எல்லா விதமான இலக்கிய வடிவத்திற்கும்இந்தத்தன்மை உள்ளபோதிலும் கவிதைக்கு இது அதிகம் உண்டு.

படைத்தவனின் வாழ்வைக் கடந்து நின்று நிலைப்பதே சிறந்த கவிதை என்றும் சொல்லப்படுவதுண்டு. இவ்வாறு நோக்குகையில் இத் தொகுப்பில் சிலகவிதைகளை குறிப்பிட்டுச் சொல்லலாம்

'மூச்சுவேர்' என்ற கவிதை சிறப்பான உள்ளடக்கத்துடன் இறுக்கமாக எழுதப்பட்டுள்ளது.

புவியீர்ப்பு விசைக்குப்
பணிந்து குனியும்
மரத்து வேர்கள்
புவியில் அடிமைத் தனத்தில்
அழுந்தும் பேர்கள்
சதுப்பு நிலக் கண்டல்
மரங்கள்
எதிர்த்து வேர்களைப்
புவிக்கு மேலாய்
புரட்சி செய்து முரசு
அறையும்
மூச்சு வேர்கள்; சமுதாய
முற்போக்காளர்கள

இக் கவிதையில் வெறும் சொல்லடுக்குகள் இல்லை. சிறந்த படிமங்களாலும், குறியீடுகளாலும் அழுத்தங்களுக்குப் பணியாத மனிதர்கள் இக் கவிதையில் சித்திரிக்கப் பட்டுள்ளனர்.

'மூச்சு வேர்கள்'.

ஆம்; மூச்சு விடக்கூடியவர்கள் இவர்கள் தான்.

நவீன கவிதை இலக்கியத்தில் சுய அனுபவங்கள் அதிகம் முன் வைக்கப்படுகின்றமையை அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

இதன் மூலம் ஒரு மக்கட் கூட்டத்தின் வாழ்வு நிலை விபரிக்கப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த அறிமுகக் கவிஞர் பல கவிதைகளின் ஊடாக தனது அனுபவ நிலையை படையல் செய்துள்ளார். சில கவிதைகளின் அனுபவங்கள் அழகாக... கவித்துவத் தன்மையுடன் கிளைவிட்டு பரவுகின்றதை கவனிக்க முடிகின்றது.

'எம்மூர்' என்ற கவிதையை இவ்விடத்தில் சுட்டிக் காட்டலாம்.

செய்தி வாயிலாக அறியப்படும் சில கருத்துக்கள் கவிஞன் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு

'பாரதம்', 'சிறப்பான விழாவில்', போன்ற கவிதைகள் எமது மண்ணிற்கெதிரான சக்திகளின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

இதேவேளை உணர்வுச் செறிவு அடர்த்தியாகாமலும் பல கவிதைகள் வார்த்தை அடுக்குகளாக எழுதப்பட்டுள்ளன.

நூலில் நான்கு வரிகள் கொண்ட கவிதைகள் மட்டுமே சில பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர்த்திருக்கலாம்.

காத்திரமான கவிதைகளை படைக்கக் கூடிய ஆற்றல் தவமணிதாசனிடம் உண்டு என 'வைகை' நூல் சொல்கிறது.

-அர்ச்சனா

# வேங்கைகளின் வேர்வை வீழ்ந்த கடல்!

காற்று வரும்
அலைகளின் மேனி தடவி
காற்று வரும்-
கடலின் செய்தி சொல்லு ;
எதிரியின் நடமாட்டத்தை
எரிச்சலுடன் சொல்லும்...
புலிகளின் பயணத்தை
புன்னகையுடன் சொல்லும்!
காற்று வரும்
அலைகளின் மேனி தடவி
காற்று வரும்.
நீலமாய் விரிந்து
நீளமாய் மிதக்கும்
இந்தக் கடல்
தமிழன் கடல்
தமிழன் நீந்திய
தண்ணீர் இது.
தமிழன் இரத்தம் கலந்த
சமுத்திரம் இது.
என்ன நினைத்துக் கொள்கிறாய்
எதிரியே.,.
எங்களின் கடலில்
நீ என்ன செய்கின்றாய்?
சோழனுக்குப் பின்
கடலுக்கென
சொந்தப்படை வைத்திருக்கும்
வேங்கைகளின் வேர்வை
வீழ்ந்த கடல் இது
உலகத்தின் கதவைத் தட்டி
ஈழத்தின் விடுதலையைச்
சொல்ல
எழுந்தவர் நாங்கள்...
எதிரியே...
அலைக் கரங்களில் தவழும்
நுரைப் பூக்களை
அளையவும் எமக்கேதான்
உரிமை உண்டு.
படகு செலுத்தவும்
கடலில்
புலிக் கொடி கட்டவும்
எமக்கே உரிமை உண்டு
நீலக் கடலில் முத்தாக
எமது புலி வீரர்...
ஓடிவிடு எதிரியே
ஓடாவிடில் உயிரை பறிக்க
வேங்கைகள் வருவர்!

- சோகுலன்

# ஐரிசு விடுதலைப் போராட்டத்தில் புதிய திருப்பம்
# ஆங்கிலேயர் வெளியேற வேண்டிய கட்டம்

மிக முக்கியமான திருப்பம்ஒன்றுஇப்போது வடஅயர்லாந்து சிக்கலில் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போதிலிருந்துஎந்நேரத்திலும் காலவரையறையற்ற போர்நிறுத்த அறிவிப்பையோ அல்லது தனது 25 வருடகால ஆயுதப்போராட்டத்தை நிறுத்தி வைப்பதாகவோ ஐரிசுகுடியரசுப் படையினர் (I.R.A) அறிவிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(இக்கட்டுரைவெளிவரும் போது இவ்வறிவிப்புவெளியாகியிருக்கக்கூடும்)கடந்தசிலகாலமாகவே இதுகுறித்தசெய்திகள்அடிபடத் தொடங்கியிருந்தபோதும்சென்ற ஞாயிறன்று அமெரிக்காவிலிருந்துவந்தகிளின்டன்அரசமட்டத்தில் நிரம்பியசெல்வாக்குள்ளஐரிசுஉயர்பட்டக்குழுவொன்று சின்பெயின் தலைவர் ஜெரி அடம்சை (Gerry Adams) சந்தித்ததின் பின்இதுஉறுதியாயிற்று இதன் பின்னர் முதற்தடவையாக அடம்ஸ் மிகுந்த நம்பிக்கையோடு 25 வருடகால ஆயுதப் போராட்டத்தை நிறுத்தும் காலம் வந்துவிட்டது என்றார். அத்தோடு ஐரிசு தேசியவாதம் மிகப்பலமானதாக தனக்கான தீர்வை அடையும் நிலையில்இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். எனவே இப்போது பிரித்தானியா வடஅயர்லாந்தில் அமைதியை கொண்டுவர தனது படைகள் வெளியேற்றம் உட்பட பல நடவடிக்கைகள் குறித்தும் தனது இறுதி முடிவினை முன்வைக்க வேண்டியகாலம் நெருங்கிவிட்டது. தனது பல நூற்றாண்டுகால அடக்குமுறையை தனது ஏகாதிபத்திய கனவின் இறுதிப்பகுதியையும் அது கைவிட்டுதனது வாலை இங்கிலாந்திற்குள் மட்டும் சுருட்டி வைக்க வேண்டிய நிலை வந்தாகி விட்டது. எனவே இங்கிலாந்து அடுத்து என்ன செய்யப்போகிறது என்பதே இன்றைய வினாவாகி விட்டது.

ஏன் என்றால் வட அயர்லாந்துச் சிக்கல் பிரித்தானியாவின் குடியேற்றவாத கொள்கையால் தோன்றிய வரலாற்றுவழி வந்த சிக்கலாகும். எனவே மூவாயிரம் பேருக்கு மேல் பலி கொண்ட இச்சிக்கலினை தீர்ப்பதற்கு வட அயர்லாந்துகத்தோலிக்க மக்கள் சார்பாக போராடும் ஐ. ஆர். ஏ எனப்படும் ஐரிசு குடியரசுப் படையினரோடு அவர்களது நியாயமான கோரிக்கைகள் குறித்து பேசுமாறு கோரப்பட்ட போதெல்லாம் பயங்கரவாதிகளோடு பேச்சே கிடையாதுஎன்றுஎடுத்தெறிந்து பேசிவந்தது ஆங்கிலேய அரசு. அது போலவே இப்படையணியின் அரசியல் பிரிவான ''சின் பெயின்'' தலைவரான ஜெரி அடம்ஸ் 1983ஆம் ஆண்டே மேற்கு பெல்பாஸ்ட் தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றியீட்டிய (ஆனால் அடம்ஸ் நாடாளுமன்றம் போகாது புறக்கணித்தார்)பின்னும் அவரையும் பயங்கரவாதி எனப் பட்டம் சூட்டி பாராமுகமாக இருந்தது பிரித்தானிய அரசு. ஆனால் பிரித்தானிய அரசுஅடித்த குத்துக்கரணம் சென்றவருடம் நவம்பர் மாதமே அம்பலமாயிற்று. இலண்டன் ஒப்சேவர் நாளேட்டில் ஒரு வருடத்திற்கு மேலாக சில முகவர்கள் உதவியோடு பிரித்தானிய அரசுமிகஇரகசியமாக ஐரிசு விடுதலை அணியோடு பேச்சுவார்த்தைகளை நடாத்துவதாக சென்றவருடம் நவெம்பர் இறுதியில் செய்தி வெளிவந்தது, இப்பேச்சுக்களின் போது இரு தரப்புமே தத்தமது நிலைப்பாடுகள் குறித்து விரிவான தகவல் பரிமாற்றங்கள், விளக்கங்கள் போன்றவற்றை நடத்தியதாக இப்போது தெரிய வந்துள்ளது,

இச்செய்தி வெளியான போது யோன்மேஜரின் அரசு பதைபதைத்துப் போனது ஏனென்றால் அப்போது மேஜரின் பழமை பேண் கட்சி ஆட்சி மிக இறங்கு நிலையில் இருந்தது. (இப்போது நிலை இன்னும் மோசம்) மிகப் பாதகமான பொருண்மிய பின்னடைவுகள், அமைச்சர் பலரின் மிகக் கேவலமான பாலியல் நடத்தைக் குறைபாடுகள் போன்றவற்றால் அரசு அல்லாடிக் கொண்டிருந்தது. அத்தோடு வளைகுடா போரின் போது ஈராக்கிற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த ஆயுதத்தடையை பிரித்தானிய வணிக நிறுவனம் அரச ஆதரவோடு மீறிய செய்திகளும் அம்பலப்பட்டு அவலநிலையில் மேஜர் அரசு இருந்தது. எனவே அத்தருணத்தில் இச்செய்திகளை மறுத்த மேஜர் ஐ.ஆர்.ஏ அமைப்பே தம்மோடு பேசமுன் வந்ததாகவும் இவர்கள்முற்றாக வன்முறைப்பாதையை கைவிட்டாலே எதிர்காலத்தில் பேச முடியும் என்று கடுப்பாகக் கூறினார். இதனால் சினமுற்றஐரிசுப்படையினர் தமது தாக்குதலின் தீவிரத்தை அதிகரித்தனர். இதனால் வருட தொடக்கத்தில் தோன்றிய நம்பிக்கை துளிர்கள் கருகின. கடந்த மார்ச் மாதம் இவர்களின் மிக துணிகரமான தாக்குதல் காரணமாக இலண்டனின் பாரிய கீத்ரோ விமான நிலைய ஒடு பாதைகளில் வீழ்ந்த 12 ஏவுகணைகள்காரணமாக விமானநிலையத்தையே சில காலம் மூட நேர்ந்தது.

அண்மைக்கால வரலாறு இதுவாக இருக்கின்றது. ஐரிசு குடியரசுப் படையினர் என்றால் மிகத் தீவிர வாதிகள் பயங்கரவாதிகள் என்றே கணத்திற்கு கணம் மேற்குலகம் மூச்சுவிட்டது. ஆனால் இவ்வியக்கம் தோன்றியதற்கான வரலாற்றுப் பின்னணியில் சனநாயக பூச்சு பூசியிருக்கும் பிரித்தானிய ஆட்சியாளரின் கொடுங்கோன்மை செயல்களும் அநீதிகளும் மறைந்து இருப்பதை மேற்கு உலகம் இன்று கவனத்தில் எடுக்கவில்லை.

பிரித்தானியாதனது ஏகாதிபத்திய வல்லாண்மை காரணமாக அயர்லாந்து தீவு மக்களுக்கு செய்த கொடுமைகள் சாதாரணமானவையல்ல. அவற்றிற்கு எதிராக அயர்லாந்து மக்கள் நடாத்திய வீரம் செறிந்த போராட்டங்களும் மறக்கப்படக் கூடியவையல்ல வழமையாக ஆங்கிலேயர் தென்னாபிரிக்கா, சிம்பாவே (முன்னர் ரொடிசியா) செய்ததின் தொடர்ச்சி போலவே இங்கும் செயற்பட்டது. தனது புரட்டஸ்தாந்து மத ஆதரவாளரை இங்கு குடியேற்றி அவர்கட்கு நிலம், ஆட்சி அதிகாரம், படைகள் பக்கபலம் போன்றவற்றை அளித்து அயர்லாந்து மக்களை கிள்ளுக்கீரைகள் ஆக்கியவரலாறு இன்று மீண்டும் நினைவு கூர வேண்டியது. இவர்களால் அப்போது உருவாக்கப்பட்ட புரட்டஸ்தாந்து ஆயுதக்குழுக்களான U. V. F.எனப்படும் (Ulster Volunteer Force) அமைப்புகளின் அடக்குமுறையே ஐரிசு குடியரசும் படை தோற்றம் பெற்றமையும் இங்கு சொல்லவேண்டிய செய்தி. எனவேதான் ஜெரி அடம்ஸ் ஐ. ஆர். ஏ தோன்றியதற்கான மூலகாரணங்கள் அற்றுப்போனாலே ஆயுதப் போராட்டம் நிறுத்தப்படும் என்றார்.

மிகப்பழைய வரலாற்றினை இங்கு புரட்டிப்பார்க்காவிட்டாலும் 1800 ஆண்டளவில் அயர்லாந்து தீவை தன்னோடு பிரித்தானியா இணைத்ததின் விளைவுகளே இன்றையநிலைமைகள் ஆகின்றன என்பதை சொல்ல வேண்டும். இவ்வடிமைத்தனத்திற்கு எதிராக ஐரிசு மக்கள் பலகாலமாகவே நடாத்திய போராட்டங்களின் விளைவும்1916–21ம் ஆண்டுகளில் ஆங்கில - ஐரிசு போர் நடைபெற்றதின்விளைவாக அயர்லாந்து தீவின் தென்பகுதியில் ஐரிசு குடியரசு என இறைமையுள்ள நாடாகியதும் வரலாறு. இங்கு 95 விழுக்காட்டிற்குமேல் கத்தோலிக்க மக்கள் செறிந்திருந்தனர். ஆனால் இத்தகைய பிரிவினை உடன்பாட்டில் வராத வட அயர்லாந்தினை அங்குள்ள பெரும்பான்மை



சின்பெயின் தலைவர் ஜெரிஅடம்ஸ்

புரட்டஸ்தாந்து மக்களின் ஆதரவோடு இற்றைவரை தன்னோடு - படைபலத்தை பயன்படுத்தி பிரித்தானியா இணைந்தமைக்கு எதிராகவே ஐ. ஆர். ஏ.போராடுகின்றது, பிரித்தானிய படையை தமது எதிரிப்படையாக தமது ஆக்கிரமித்த இராணுவமாகவே கத்தோலிக்க மக்கள் கருதுகின்றனர். உண்மையிலே எவ்வாறு றொடிசியாவை விட்டு பிரித்தானியா வெளியேறியது போலவே அயர்லாந்திலும் வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் வட அயர்லாந்தின் பெரும்பான்மை புரட்டஸ்தாந்து மக்களின்'இணைப்புக்கட்சிகள் '(Unionists) எனப்படும் தீவிர மதவெறியரான இயன் பைஸ்லி(Rev-IanPaisley) போன்றோரின் ஆதரவை சாட்டாக வைத்து இன்னமும் தனது படைகளை வடஅயர்லாந்தில் வைத்திருக்கும் பிரித்தானியா இப்போது சருவதேச நெருக்கடிகளை சந்திக்கத் தொடங்கி விட்டது.

அதில் குறிப்பாக கிளின்டன் பதவி ஏற்றபின் ஐரிசு மக்கள் சிக்கலைத் தீர்ப்பதில் கூடுதல் அழுத்தம் பிரித்தானியாவுக்கு கொடுத்து வருகின்றார். ஏனென்றால் அமெரிக்காவில் மிகச் செல்வாக்கும் பலமும் நிரம்பிய அயர்லாந்து மக்கள் தொகுதியுண்டு. கிளின்டன் தேர்தல் வெற்றிக்கு இவர்கள் பின்பலமாக இருந்ததும் பல சனநாயகக்கட்சி உறுப்பினர்கள் செனட்டர்கள் வட அயர்லாந்து மக்கள் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருப்பதும் தெரிந்தவையே ஏனென்றால் ஆங்கிலேய கொடுங்கோன்மை ஆட்சியின் போது நிலங்களும் பறிக்கப்பட்டு வறுமையின் பருவத்தில்சிக்கிய அயர்லாந்து மக்கள் (1841 - 1951) ஆண்டுகட்கிடையில் பெருமளவில் புலம்பெயர்ந்தனர். இவ்வாறு 10 இலட்சத்திற்கு மேற்பட்டோர் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அமெரிக்கா சென்றனர். பலர் இடையிடையே மடிந்தனர் என்றாலும் அமெரிக்கா சென்ற ஐரிசு மக்கள் இன்று அங்கு மிகச் செல்வாக்குள்ள அரசியல் குழுவாக உள்ளனர். அது மட்டுமன்றி இங்கிலாந்திற்கு எதிராக வட அயர்லாந்து கத்தோலிக்க மக்களின் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவினை பல்வேறு வழிகளிலும் வழங்கி முதுகெலும்பாக விளங்குகின்றனர்.

எனவே இப்போது இங்கிலாந்து அரசு சருவதேச அரங்கில் பெரும் அழுத்தத்திற்குட்பட்டு''ஊருக்குமட்டுமா அமைதி உபதேசம்? என்கிற வினாவை எதிர் நோக்குகின்றது.

அதுமட்டுமன்றி மிகத்துணிகரமான அதே சமயம் பொருண்மிய ரீதியில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தும் ஐரிசுப்படையினரின் தாக்குதல்கள் இன்று லண்டன் மாநகரத்தையே பாதுகாப்பற்ற தாக்கிவிட்ட சிக்கல் ஒரு புறம்; அமெரிக்க அழுத்தம் இன்னொரு புறம் காரணமாக விழுந்தும் மண்படாதவன் போல ஐ. ஆர். ஏ ''வன்முறையை கைவிட்டால் பேசத் தயார்''என்றும் பந்து இப்போது அவர்கள் பக்கம் என்றும் கூறிவருகிறது. இதற்கு சென்ற வருடம் டிசம்பர் 15 ஆம் திகதி பிரதமர் மேஜரும் ஐரிசு குடியரசு பிரதமர் அல்பேட் ரெனோல்ட்சும் கைச்சாத்திட்டு வெளியிட்ட அமைதிப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு பேசலாம் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் இப்பிரகடனம் குறித்து வடஅயர்லாந்து கத்தோலிக்க மக்கள் மனதிலே அதிருப்தி இருப்பதாக தெரிகின்றது. இரு வேறுபட்ட முரண்பட்ட நிலைகளை கொண்டுள்ள இரு அரசுகளின் கருத்துக்களை உள்ளடக்குவதாக அமையும் இப் பிரகடனம் வெறுமனே'' அயர்லாந்து மக்களின் இரு பகுதியினரும் (வட, தென்) கருத்தொருமித்து தமது சுய நிர்ணய (தன்னாட்சி) உரிமையைஇணக்கமான சுதந்திரமான முறையைப் பயன்படுத்தி ஒன்றிணைந்து அயர்லாந்தை உருவாக்குவது தொடர்பாக முடிவெடுக்கும் உரித்துடையவர்''என்று அமைகின்றது. தன்னாட்சி என்கிற சொல் இங்கே மயக்கத்தை உருவாக்குவதாக இருப்பதால் அதுபற்றி மேலதிக விளக்கங்களைதாம் எதிர்பார்ப்பதாக சின்பெயின் கூறிவருகின்றது.

இருந்த போதும் வட அயர்லாந்து புரட்டஸ்தாந்து மக்களின் (Unionists) இணைப்பாளர் அமைப்புகளோ (இவர்கள் தொடர்ந்தும் வடஅயர்லாந்து இங்கிலாந்தோடு இணைந்திருப்பதை விரும்புபவர்கள்) ஐ. ஆர். ஏ அமைப்போடு வேறு இரகசிய ஏற்பாடுகள் பிரித்தானிய அரசு செய்து விட்டதாக இது "நம்பிக்கைத் துரோகம்" என்றும் ''நம்பியவரை கைவிட்ட நயவஞ்சகர்'' என்றும் கடும் கண்டனங்கள் எழுப்பி வருகின்றனர். புரட்டஸ்தாந்து மக்களின் நலன்கட்கு எப்பாதிப்பும் வராது எனபிரித்தானிய தரப்பில் கூறப்பட்டாலும் போர் நிறுத்தத்தின் பின் ஐ. ஆர் ஏயுடன் நடாத்தப் போகும் பேச்சுக்களின் விளைவாக வட அயர்லாந்தோடான தனது சட்டத் தொடர்புகளை அறுக்க நேரிடும் என்பது மறைக்க முடியாத சங்கதி.

எனவே இப்போது சின்பெயின் தலைவர் 25 வருட போரட்டத்தை நிறுத்தப் போவதாக கூறியதின் மூலம் இங்கிலாந்தினை ஒரு பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளி விட்டு வட அயர்லாந்து சிக்கலுக்கு பிரித்தானியா முன் வைக்கப் போகும் தீர்வு என்ன என்பதை உலகமே அறிய காத்துநிற்க வைத்து விட்டார். மிக மோசமான நிலைமைகளையும் மிக இலாவகமாக கையாளும் தன்மை வாய்ந்த அடம்ஸ் எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அமைதி பொறுமை இழக்காதவர் என்கின்ற தனது பெயரை இப்போது காப்பாற்றி விட்டார். அத்தோடு அடக்கு முறையாளர்க்கும் அவர்களை நம்பியிருப்போர்க்கும் இறுதியில் எத்தகைய தோல்வி ஏற்படும் என்பதையும் புரியவைத்து விட்டார்.

**பாலகுமாரன்**


★ பேராதனை பல்கலைக் கழகத்திற்கான

**B.A.**

விரிவுரைகள் ஆரம்பம்

3-9-94 (11 மணி)

**G.A.Q. மீட்டல் (டிசம்பர்)**

பரீட்சைக்கான விரிவுரைகள்

ஆரம்பம்

3-9-94 (12 மணி)

★ யாழ்.பல்கலைக் கழகத்திற்கான

**G.A.Q. விரிவுரைகள்**

ஆரம்பமாகி விட்டன.

விபரங்களுக்கு:

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்.

(சி-10220)

# காமினி எதிர்க்கட்சி தலைவராகத் தெரிவு; ஜனநாயகச் சதி என்கிறார் ரணில்

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்திற்கான எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பாக ஐ.தே க.வினுள் கருத்து வேறுபாடுகளும் பூசல்களும் முளைவிட்டிருப்பது இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. அத்தோடு இவ்விடயத்தில் ஜனாதிபதி செயலகத்திற்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை செயலகமான சிறிகோத்தாவிற்கு மிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பதும் அம்பலமாகியுள்ளது.

## ரணிலின் குற்றச்சாட்டு

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு செய்யப்பட்ட இரகசிய வாக்கெடுப்பின் தன்மை குறித்து இப்போது சட்டத்தரணிகள் தீவிரமாக அலசி ஆராய்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவி தோல்வியைத் தொடர்ந்து 'ஜனாதிபதி மாளிகையின் ஜனநாயகத்தின் வேலை இது' என கூறியபடி ரணில் விக்கிரம சிங்கா அம் மண்டபத்தில் இருந்து எழுந்தார். இதைத்தொடர்ந்து, ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் இடையே நடைபெறும் கலந்துரையாடல் என அழைத்து விட்டு ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டி இட்ட ஐந்து கட்சிகளைச் சேர்ந்த பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர் அழைக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டி விட்டு ஜனாதிபதி செயலகத்தை விட்டு வெளியேறினார் ரணில் விக்கிரமசிங்கா.

## பதவி வழங்க தடை

பொதுத்தேர்தல் முடிவைதொடர்ந்துரணில் விக்கிரமசிங்கா அலரி மாளிகையில் நடந்து கொண்ட விதம் குறித்து கோபம் அடைந்த ஐ. தே. கட்சியில் ஒரு பிரிவினர் எதிர்க்கட்சி தலைவர் பதவி ரணிலுக்கு கிடைக்காது தடுப்பதற்கான தீவிர செயல் பாட்டை மேற்கொண்டனர்.

முதல் முதலாக ரணிலின் அலரிமாளிகை விடயம் வெளிவந்ததைத் தொடர்ந்து முன்னாள் மின்சக்தி மனித வள அமைச்சர் சந்திரபண்டார காமினி திசா நாயக்காவை தொலைபேசியில்அழைத்து ரணிலுக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்படகூடாது என்றும் காமினியை அந்த கதிரையில் இருத்தி அழகு பார்ப்பதை தான் விரும்புவதாகவும் அதற்கான சகல நடவடிக்கைகளுக்கும் தான் காமினிக்கு உதவ தயாராக இருப்பதாக தெரிவித்தார். இதனை தொடர்ந்து முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தகவல் அமைச்சர் எ,எம் எஸ். அதிகாரி மற்றும்முன்னாள்அமைச்சரானவீரசிங்கமல்லிமாராச்சிபோன்றோர்காமினியை சந்திக்கசென்ற அமைச்சர்களில் சிலராவர் இதனைத் தொடர்ந்து மத்திய மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் காமினியை சந்தித்து பேச்சுக்களை நடத்தினர்.

## காமினியின் அழைப்பு

இதன் பின்னர் காமினி திசாநாயக்கா ரணில் விக்கிரமசிங்காவுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டார். 'ரணில் முக்கியமான ஒரு விடயம் தொடர்பாக பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டியிருப்பதாகவும் எனவே நேரடியாக சந்திக்க விரும்புவதாக காமினி தெரிவித்தார்.

இதற்கு ''என்ன? எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பாகதானே?''என பதிலுக்கு கேட்டார் ரணில். பதிலளித்த காமினி ஐ.தே.க. வின் பல உறுப்பினர்கள் நான் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்குவருவதையேவிரும்புகின்றார்கள். எனவே இது குறித்து விரிவான பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்றும்ஜனாதிபதிசெயலகத்திற்குவருமாறுவேண்டுகோள்விடுத்தார்.

## பதவிக்குப் போட்டி

காமினி ஜனாதிபதி மாளிகை சென்றார். ரணிலும் அங்குவந்து சேர்ந்தார். இருவர் தாம்தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி முன்னிலையில் வாதிட்டனர். இந்தநிலையில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனை சமூகம் அளித்தார். இருவரின் பிணக்குகளும் விரிவடைந்து சென்றது. உங்கள் இருவரின் பிணக்குகளினால் கட்சிஉடைய கூடாது என முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய ஜனாதிபதியும் கருத்துத் தெரிவித்தனர்.

''சரி அப்படியென்றால் இதுவிடயமாக கட்சி உறுப்பினர்களின் வாக்கெடுப்புக்கு விடுவோம்''என காமினி தெரிவித்தார். ரணில் ''எதிலும்எனக்கு ஆட்சேபம் இல்லை நான் எந்த நிலைமையையும் முகம்கொடுக்க தயாராக இருக்கின்றேன்''என்றார்

## காமினியின் பேரம்பேசல்

இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியின் சகல உறுப்பினர்களையும் ஹோட்டல் ஒன்றுக்கு காமினி திசாநாயக்கா பேச்சுநடத்த அழைத்தார். பேரம் பேசலில் ஈடுபட்டார். ஒருவாக்குஒருலட்சம் ரூபா சன்மானம்தருவதாக வெளிப்படையாக தெரிவித்தார். இவரின் நடவடிக்கைக்கு நந்தா மத்தியூ. சந்திர பண்டார ஆகிய முன்னாள் அமைச்சர்கள வெளிப்படையாகவே ஆவரவு தெரிவித்தனர். ரணிலுக்கு சார்பாக ஒஸிஅபேகுணசேகர, காமினி அத்துக்கோரள ஆகியோர் பிரசாரங்களை மேற்கொண்டனர்.

இந் நிலையைத் தொடர்ந்து காமினி திசாநாயக்கா துரிதமாக செயற்படலானார். டாக்டர் விக்கிரம வீரசூரியாவுடன் தொடர்பு கொண்டார் பாலித பெல்பொல, றோகான் பெதியகொட போன்ற கட்சி முக்கிலஸ்தர்களுடன் காமினி இது தொடர்பாக பேச்சுக்களை நடத்தினார். இதனை தொடர்ந்து ஜனாதிபதி மாளிகைக்கு சென்று காமினியை எதிர்க்கட்சித் தலைவர் ஆக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் பிரதமர் பதவியில் இருந்தவரே எதிர்க்கட்சி தலைவர் பொறுப்பை ஏற்பதே மரபு என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால் இது மரபு என்றும் இது விதியல்ல என்று அவர்கள் ஜனாதிபதியுடன் வாதிட்டனர்.

## இ. தொ. காவின் நழுவல்

காமினி நடை பெறவிருக்கும் இரகசியவாக்கெடுப்பு தொடர்பாக இ. தொ. காவின் ஆதரவை கோரி அதன் தலைவர் சௌ. தொண்டமானிடம் சென்றார். பல விடயங்களில் கூட்டணியாக இணைத்து செயல்பட்டமையினால் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இ. தொ. கா முழுமையான ஆதரவு தனக்கு என்ற இறுமாப்புடன் அவரை அணுகினார்.

**புதிய பாதுகாப்பு பிரதியமைச்சர்கேணல்அநுருத்தரத்வத்தயை அமைச்சில் வரவேற்க வெடிகள் கொளுத்தப்பட்டன. அதேசமயம் எதிர்க்கட்சித் தலைவராககாமினி தெரிவானதும் அறிவிக்கப்பட்டது தனதுதெரிவிற்கேவெடிகொளுத்தப்படுவதாக வெற்றிப் புன்னகையிட்டாராம் காமினி திசாநாயக்கா**

இது ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசல் இதனை அக்கட்சி தீர்த்து, கொள்ள வேண்டுமே தவிர இதில் தனது கட்சி தலைபிட விரும்பாது மரபின்படி நடந்து கொள்ளுமாறு தொண்டமான் ஆலோசனை கூறவே காமினி திகைப்படைந்தார்.

செய்வது என்ன வென்று தெரியாது தடுமாறினார் இருவரிடையே நேரடியான நீண்ட நேரம் பேச்சுக்கள் நடைபெற்றது. இறுதியில் தொண்டமான், இ.தொ.கா. எந்தப்பக்கமும் சாரமாட்டாது என்ற உறுதியை அளித்தார்

## வாக்கெடுப்பு

சகல பாராளுமன்ற ஐ.தே.க.உறுப்பினர்களையும் 24ஆம் திகதி காலை 10.15 மணிக்குஜனாதிபதி செயலகத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. புதன் காலை 9.30மணிக்கு அனுரா பண்டார நாயக்கா, சொக்சி ஆகியோர் முதலாக ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்தனர். ஐ தே.க. பல அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்கள் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் வருகை தந்து கொண்டு இருந்தனர். பலர் கூட்டம் கூட்டமாக நின்று கதைத்துக்கொண்டனர். அனுராவும் - சொக்சியும் எந்த அணியிலும் சேராது தனித்து நின்றனர்.

காலை 9.45. சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்து சேர்ந்து விட்டனர். காமினி திசாநாயக்காமிகவும் கம்பீரமாகசபை மண்டபத்தில்நடந்து வந்து கொண்டு இருந்தார். உறுப்பினர் காலை வணக்கம் செலுத்திவிட்டு அமர்ந்து கொண்டனர். ரணில் விக்கிரமசிங்காவும் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரவும் ஏதோ தீவிரமாக பேச்சுக்களை நடத்திக் கொண்டு இருந்தனர்.

காலை 10.15. ஜனாதிபதி அவர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு வந்து தனது கதிரையில் அமர்ந்து கொண்டார். அருகே பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர அமர்ந்திருந்தார். ஜனாதிபதி தற்போது கட்சியின் நிலை தொடர்பாக விளக்கம் ஒன்றை அளித்து எதிர்க்கட்சி தலைவர் தெரிவு பாராளுமன்ற உறுப்பினரிடை விடப்படுவதாக கூறி தனது உரையை முடித்து கொண்டார். பொதுச் செயலாளர்எழுந்து எதிர்க் கட்சி பிரதம கொறடாவாக விஜேபால மென்டிசின் பெயரை வாசித்தார். இது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஐ.தே.க சபாநாயகர் பதவிக்கு அனுரா பண்டாரநாயக்காவும் உப சபாநாயகர் பதவிக்கு ஆரிய பி. ரெக்காவவும் விவாத பிரதிவாதங்களுக்த மத்தியில் தெரிவு செய்யப்பட்டனர்.

அடுத்து எதிர்க்கட்சி தலைவர் பதவி என்ற கேள்வி எழுந்தது. சபையில் மௌனம் நிலவியதுஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி காமினி ரணில் பெயர்கள் மீண்டும் எழுப்பப்பட்டது. நேரம் 11,05 காட்டிக் கொண்டு இருந்தது.

கட்சி பொதுச் செயலாளர் எழுந்து, சில ஒற்றைகளை உறுப்பினர்களுக்கு வழங்கினார். இதில் பலர் மறைமுகமாக வாக்களித்தபோதும்முன்னாள் அமைச்சர்களான எச். ஜீ பீ. நெல்சன், மேவின் சில்வா மற்றும் ஜீ. எம். பிரேமச்சந்திர சரத் அமுனுகம வெளிப்படையாக காமினி பெயரை எழுதினார்கள். இதனைத் தொடர்ந்து அனைவரின் துண்டுகள் பெட்டிக்குள் போடப்பட்டன.

## ஜனாதிபதியின் திணறல்

11.45 க்குவாக்குகளை எண்ணும் பணி ஆரம்பமானது சபையிலே ஒரே மயான அமைதி ஜனாதிபதி,பொதுச் செயலாளர், சரத் அமுனுகம ஆகியோர் வாக்குகளை எண்ண தொடங்கினர் பொதுச் செயலாளர் எழுந்து முடிவுகளை ஜனாதிபதியிடம் தெரிவித்தார். ஜனாதிபதி விஜேதுங்கா சங்கடப்பட்டவராகக் காணப்பட்டதுடன் அதனை வெளியிடவும் தயக்கம் காட்டினார்.

ஜனாதிபதியின் தயக்கத்தை அருகே அமர்ந்திருந்த ரணில் நன்குஊகித்துக்கொண்டு ஏதோ ஜனாதிபதிவிரும்பாத ஒன்று நடந்து விட்டது என்பதை புரிந்து கொண்டு 'பரவாயில்லை முடிவை அறிவித்து விடுங்கள்' என மிக அடக்கமாக வேண்டுகோள் விடுத்தார். முடிவு ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டது. காமினி பெற்ற வாக்குகள் 45, ரணில் பெற்ற வாக்கு 42 என்றும் தெரிவித்த ஜனாதிபதி இம்முடிவுக்கு அமைய எதிர்க்கட்சித் தலைவர் பதவி கட்சி உறுப்பினர்களின் அநேகர் விருப்பப்படி காமினிக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்து விட்டு வெளியேறினார்.

திடீர் என எழுந்த ரணில்,காமினிக்கு கைகுலுக்கி விட்டு விரைவாக அங்கிருந்தவர்களிடம் ''ஜனாதிபதி செயலக ஜனநாயக வேலை இது!'' என தெரிவித்துவிட்டு வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்ற முறையில் எதிர்க்கட்சி பதவியை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ரணில் தனது சட்டத்தரணிகளுடன் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் ஐ. தே. க கட்சி சட்டத்தரணி ரணில் பக்கம் சார்ந்து செயல்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான தேர்தல் ஐ. தே. க அங்கத்தவர்களுக்கு இடையில் மட்டும் தான் நடத்தப்பட்டு இருக்க வேண்டும் என்றும் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய நிகழ்ச்சி ஜனாதிபதி செயலகத்திற்கு மாறியது ஏன்? என்ற கேள்வி ரணில் தரப்பு சட்டத்தரணிகள் எழுப்புகின்றனர். இத்தேர்தலில் ஐ. தே.க அங்கத்துவம் பெறாத ஏனைய கட்சிகள போட்டியிட்டதாகவும் எனவே அவர்களை கட்சி அங்கத்தவர்கள் என கொள்ள முடியாது எனவும் வாதிடுகின்றனர்.

நிமலராஜன்

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்



# ஈழத்து பிரசுரங்கள் விற்பனையில் எதிர்நோக்கும் சவால்கள்!

ஈழத்து நூல்கள் அல்லது சஞ்சிகைகளின் விநியோக நிலை பற்றி பல கருத்துகள் எழுந்துள்ளன. இந்தியாவிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் வெளிவரும் நூல்கள் போன்று ஈழத்து நூல்கள் வியாபார நிலையில் உச்சத்தை எட்டவில்லை என்பது இங்குபொதுவான கருத்தாகக் காணப்படுகிறது.

ஆக்க இலக்கியநூல்களின் வியாபாரத் தன்மை மிக நீண்ட காலமாக மோசமடைந்திருக்கின்றமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

படைப்பு நிலை, பிரசுர நிலையைத்தாண்டி விற்பனை நிலையை மிக சிரமத்துடன் ஈழத்து நூல்கள் எட்ட வேண்டிய துர்ப்பாக்கியம் தொடர்கின்றது.

ஆக்க இலக்கிய நூல்களைப் பொறுத்தவரையில்அந்நூலை எழுதியவராலேயே வெளியிட வேண்டிய நிலையும், பின்னர் அதை விநியோகம் செய்ய வேண்டிய நிலையும் இங்குள்ளது.

பெருந்தொகை பணம் முதலிடப்பட்டே வெளியிடப்படும் நூல்கள் குறுகிய காலத்திற்குள் முதலை ஈட்டித்தரும் என்பதில்லை. புறநடையாக சில படைப்பாளிகளின் நூல்கள் இருப்பதுண்டு.

சுயமுயற்சியால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படும் நூல்களை விநியோகம் செய்வதற்கு நாகரீகமான 'திணிப்பு' ஒன்றை படைப்பாளிகள் செய்ய வேண்டிய அவலமான நிலை நீண்டகாலமாக ஈழத்து இலக்கியத் தளத்தில் இடம் பெறுகிறது.

வெளியீட்டுவிழா, அறிமுக விழா ஏற்படுத்தி வியாபாரிகள், பிரமுகர்கள் சிலரை அழைத்து (பலராகவும் கொள்ளலாம்) சிறப்புப்பிரதி வழங்கும் முறை இங்குள்ளது.

எழுத்தாளன், வியாபாரி, வாசகன் என்கிற சகல மட்டங்களையும் சார்ந்தவர்கள் இந்நிலைக்கு காரணமாகியுள்ளனர் என்பது பலரின் கருத்தாகவுள்ளது.

'படைப்பாளி ஒருவன் புத்தகம் ஒன்றுபோட்டால் அப்புத்தகத்தின் நூறு பிரதிகளை விற்பனை செய்வதற்கு சுமார் ஆறுமாதங்கள் செல்கின்றன' என்கிறார் பூபாலசிங்கம் புத்தக விற்பனை நிலைய நிர்வாகி ராஜன் பூபாலசிங்கம். புத்தக விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படும் நூல்கள் மிக குறைந்தளவிலேயே விற்பனையாகின்றன. இதன் மூலம் ஒன்றை நாம் உணர முடிகின்றது.

விருப்புடன் ஈழத்து நூல்களை, அல்லது சஞ்சிகைகளை பணம் கொடுத்து வாங்கிச் சென்று வாசிக்கும் நிலை மந்தமடைந்துள்ளது என்பதே. ஆனாலும் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் குறிப்பிடக்கூடிய சில சஞ்சிகைகள் அல்லது நூல்கள் இங்கு இதே விற்பனை நிலையங்களில் அமோகமாக விற்கப்படுகின்றன.

'ரமணிச் சந்திரன், சாண்டில்யன், பாலகுமாரன், ராஜேஸ்குமார் அகியோரின் நூல்கள் இங்கு அதிகமாக விற்பனைசெய்யப்படுகின்றன' என்கிறார் திரு. ராஜன்

இவ்வாறு ஒரு கருத்து வெளியிடப்படுகின்றபோது இந்தப் பிரச்சினையின் வேர் எங்கிருக்கின்றது என ஆராய வேண்டிய தேவையும் உள்ளது. எழுத்தாளன், வியாபாரி, வாசகன் என்கிற மூன்று மட்டங்களின் சேர்மானத்தின் விளைவு என்றே இதைக் கருதக்கூடியதாகவுள்ளது.

''ஈழத்து நூல்கள் சாதாரண வாசகனைக் கவரும் வடிவத்திலிருந்து வித்தியாசபடுகின்றது. வெறும் உள்ளடக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு வியாபாரம் செய்ய முடியாது. மற்றைய நாடுகளில் வளர்ச்சியடைந்த பதிப்புகள். அதனுடன் எமது நூல்கள் விற்பனை நிலையில் போட்டி போடமுடியாது'' என்கிறார் மாறன் பதிப்பகத்தில் கடமைபுரிபவரும் கவிஞருமான வளவை வளவன்.

மனம் விரும்பி ஈழத்து நூல்களை தேடிப் பெற்று வாசிக்கும் 'சூழல் இங்கு உருவாக வில்லை அல்லது உருவாக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடவேண்டியது.

பெயர் பெற்ற பலபிரபல படைப்பாளிகளின் நூல்கள் ஓரளவிக்குவிநியோகநிலையில் முன்னேற்றகரமாக உள்ளன. ஆனால், அறிமுக எழுத்தாளர்களின் நூல்கள் ஒவ்வொரு புத்தக விற்பனை நிலையங்களிலும் தேங்கியிருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

> படைப்புநிலை,பிரசுர நிலையைத் தாண்டி விற்பனை நிலையை மிகச் சிரமத்துடன் ஈழத்து நூல்கள் எதிர் கொள்கின்றன.
>
> - வவுனியா திலீபன்

'பத்திரிகை, சஞ்சிகைகளில் நன்கு அறிமுகமானவர்கள் வெளியிடும் நூல்கள் ஓரளவிற்கு அதிகளவில் விற்பனையாகின்றன' என்கிறார் திரு. ராஜன்.

நூல்களை சுயமாக வெளியிடும் படைப்பாளி ஒருவன் பெரும் பண முடைக்கு உள்ளாகின்றான். மேலும் நூல் வெளியிடுவதைவிஷப்பரீட்சை என கருதுகின்றான்.

'இதற்கு இங்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. சந்தைப்படுத்துவதற்கு ஒரு பொதுவான அமைப்பு உருவாக வேண்டும். தனி நபர் பதிப்பகங்களால், சந்தைப்படுத்த முடியாது' என்று உறுதியாகச் சொல்கிறார் வளவை வளவன்.

மேலும் அவர் சொல்கின்றார். 'உள்ளூராட்சித் திணைக்களம் நினைத்தால் இதைச் செய்யலாம். இதனால் வெளியீட்டாளர்களுக்கும் சுகம். படைப்பாளிக்கும் சுகம். அல்லாவிடில் - தொடர்ந்து வாசகன் எம்மைக் கண்டு ஓடி ஒளிக்கும் நிலை ஏற்படும்.

சிரமப்பட்டு படைத்த நூலை மனப் புகைச்சலுடன் உறவினரிடம் நண்பர்களிடம் திணிக்க படைப்பாளிகள் விரும்ப வில்லை. இதனால் புத்தகம் வெளியிட்ட படைப்பாளி ஒவ்வொருவரின் வீடுகளில் நூற்றுக் கணக்கான நூல்கள் தேங்கிக் கிடந்து செல்லரித்துப் போகின்றன.

'நல்ல படைப்பை அல்லது சஞ்சிகையை வாசிக்க வேண்டும் என்று எண்ணுவோரின் தொகை இங்கு சுருங்கிப் போயுள்ளது. சுவாரசியமான பொழுது போக்குவதற்குரிய தகவல்களைத்தான் பெரும்பாலான வாசகர்கள் நாடுகின்றார்கள் என்கிறார் 'கவிதை சஞ்சிகையின் ஆசிரியரும் விமர்சகருமாகிய யேசுராஜா.

மேலும் அவர் சொல்கின்றார். 'உயர் வகுப்பு மாணவர்கள் மத்தியில் ஈழத்து நூல்கள் சம்பந்தமான அறிவையூட்டும் முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும். இந் நூல்களின் காத்திரத்தை சிறப்பை பதிய வைக்க வேண்டும்.

இதேவேளை இங்குள்ள பல புத்தக நிலையங்கள் ஈழத்து நூல்களை புறக்கணிக்கின்றன என்ற கருத்தும் நிலவுகின்றது. இந்திய நூல்களுக்கு வழங்கப்படும் சலுகைகள ஈழத்து நூல்களுக்கு இல்லை என குற்றம் சாட்டப்படுகின்றது.

முற்பணம் வழங்கப்படாமல், 'விற்றால் காசு' என்ற ஒப்பந்த அடிப்படையில் பெறப்படும் நூல்கள் இந்திய நூல்களுக்கு கீழே தள்ளி வைக்கப்படுகின்றன. வாசகனின் பார்வைபடாத பகுதியில் ஒதுக்கப்படுகின்றன என்பது பலரின் குற்றச்சாட்டு.

புத்தக விற்பனை நிலையத்தைச் சேர்ந்தோர் அடிப்படையில் ஒரு வியாபாரிகள். இதன் பின்பே சமூகப்பொறுப்பு. இதனால் அவர்களின் செயலை சிலர் அங்கீகரிக்கவும் செய்கின்றனர்.

ஆகவே ஈழத்து நூலாசிரியர்கள விற்பனை நிலையில் மிக மோசமான கட்டத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

'89-90 ஆகிய இரு ஆண்டுகளில் ஈழத்திலிருந்து வெளிவந்த 240 பிரசுரங்களை (ஒவ்வொன்றிலும் 100 பிரதி வீதம்) வாங்கினோம். 91ஆம் ஆண்டில் பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இந்த மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட்டது. இதனால் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு நிதி கிடைக்கவில்லை. இதனால் புத்தகக் கொள்வனவு பாதிப்படைந்தது' என்கிறார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா.

எமது மொழியின் கலை கலாசார பண்பாடுகளில் தனித்துவம் பேணப்பட வேண்டுமாயின் நிறைய உள்ளூர் பிரசுரங்கள் வெளிவந்து சகல தரப்பினரையும் அவை எட்ட வேண்டும்.

'ஒவ்வொரு உள்ளூர் படைப்பு பற்றியும் விமர்சன அரங்கு நடாத்தப்பட வேண்டும். அப்போது தான் அது வாசகனை எட்டும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சொல்கின்றார்.

எல்லாத் தரப்பினரிடமிருந்தும் விழிப்புணர்வு ஏற்படுவதன் மூலமே ஈழத்து படைப்பிலக்கிய நூல்கள், சஞ்சிகைகளின் காத்திரம் பரவலாக்கப்படுவது சாத்தியம். இதன் மூலமே விற்பனை நிலையை அதிகரிக்கலாம்.அல்லது உச்சத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்பது பொதுவானகருத்து.

★ ★

# மனித நாகரிக வளர்ச்சியில் மொழியுடன் கூட வளர்ந்த எண் அறிவு

எண்ணிக்கையில் ஏற்படும் கூடுதல் அல்லது குறைதலை கண்டறியக் கூடிய திறன் சில விலங்குகளுக்கு உண்டு என கருதப்படுகிறது. எடுத்துக் காட்டாக குஞ்சு, அல்லது குட்டிகளின் எண்ணிக்கை குறைந்தால், அல்லது இரை அதிகமாக அல்லது குறைவாக இருந்தால் சில விலங்குகள் அவற்றை கண்டு பிடித்து விடுகின்றன. குழந்தைகளும் தாம் பேசக்கற்றுக் கொள்ள முன்னரே தமக்கு பரிட்சயமான பொருள்களின் எண்ணிக்கையிலுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்கின்றன. மனித நாகரிக வளர்ச்சியில், மொழி வளர்ந்தபோது கூடவே இந்த எண்அறிவும் வளர்ந்து வந்துள்ளதாக கருத இடமுண்டு.

பேச்சு, மனிதனுக்கு அளித்த திறன்களில் எண்களுக்குப் பெயரிடுவதுதான்மிக முந்தியதாக இருந்திருக்க வேண்டும் ''எண்'' என்பதே நம்மைச் சுற்றியுள்ள உலகைப் பற்றிய பல விடயங்களை வகைப்படுத்தி மனதில் எண்ணுவதை அதாவது சிந்திப்பதைக் குறிக்கிறது.

ஒரு மொழியில் எண்ணியல் எந்த அளவுக்கு வளர்ந்திருந்தாலும் சரி, எண்களைக் குறிப்பதற்கு பயன்படும் சொற்கள் அந்த மொழியின் வரலாற்றின் துவக்க கட்டத்திலேயே தோன்றிய பிறகு அவை மாறாமல் அப்படியே இருந்துவந்துள்ளதாக தோன்றுகிறது. தவிர எண்களுக்கு அளிக்கப்பட்ட பெயர்கள் அவை உருவானதன் அடிப்படைபற்றியும் கோடிட்டுக் காட்டுகின்றன.

எண்களுக்குப் பெயரிடுவதில் பல வகையான விதிமுறைகள் கையாளப்படுகின்றன. இவை வெவ்வேறான பண்பாடுகளையும் மொழிகளையும் பிரதிபலிக்கின்றன.


**தொகுப்பு:**
**சி, சிவபாலன்**

இவ்வகையில் சொற்கள் உருவாக்கப்பட்ட எண்களுக்கு அடையாளங்களை உருவாக்க வேண்டியிருந்தது. வாயால் எண்களைக் கூறியதுடன் சைகைகளும் (விரல் விட்டு எண்ணுவது) மற்றும்கணக்குச் சட்டம், கற்கள், அல்லது விதைகள் கயிற்றில் முடிச்சிடுதல் போன்றவையும் முன்னர் பயன்படுத்தப்பட்டன. இவற்றைத் தொடர்ந்துதான் எண் எழுத்துவடிவம் பெற்றது.

எண்களை எழுதும் முறை வந்தபின்தான் எண்ணியல் மிகப் பெரிய அளவுக்கு வளர்ந்தது. இந்த எண்ணியல் முறைகளில் எண்கள் பயன் படுத்தப்படவில்லை. எண்களுக்குப் பதில் அகரமுதலியில் அடங்கிய எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டன எனினும் இதனைப் பயன்படுத்த அகரமுதலியின் வரிசைமுறையும் அந்தந்த எழுத்துக்கு உரிய எண்மதிப்பும் தெரிந்திருக்க வேண்டும். இம் முறையில் அகரமுதலியின் முதல் ஒன்பது எழுத்துக்களும் 1 முதல் 9 வரையிலான எண்களுக்குரிய மதிப்புப் பெற்றவையாக இருந்தன. அகரமுதலியின் அடுத்த ஒன்பது எழுத்துகளும் 10, 20, 30 ... என 90 வரையிலான மதிப்பைப் பெற்றிருந்தன. அகரமுதலியின் மீதி எழுத்துக்கள் நூறுகளை குறித்தன இவ்விதமாக அகர முதலியின் எழுத்துக்கள் எண்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் அகரமுதலியின் எழுத்துக்கள் மிக குறைந்தவையாக இருந்ததனால் இந்த முறையின்கீழ் 10,000க்குமேலான தொகைகளை எழுத முடியவில்லை பெரிய எண்களை எழுத வேறு முறைகள் பின்பற்றப் பட்டபோதும் அவை சிக்கலை ஏற்படுத்தின.

(8ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்நகரில் சோட்டோகான் கராத்தே புத்தக வெளியீடு



இலங்கை கராத்தே சங்கத்தின் ஸ்தாபகரும், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் சோட்டோகான் கராத்தே சம்மேளனத்தின் பிரதம அமைப்பாளரும், மீன் பாடும் தேன் நாடான மட்டுநகர் தந்த தமிழ் மகனுமாகிய சென்சேய் பொனி றோபேட்ஸ் (5ஆம் கறுப்புப் பட்டி) அவர்களால் தமிழில் முதல் முதலாக வெளியிடப்பட்ட ''சோட்டோகான் கராத்தே காட்டா'' புத்தகத்தின் முதல் பிரதியை மாண்புமிகு வே. பொ. பாலசிங்கம் (ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) அவர்கட்கு, சென்சேய் பொனி றோபேட்ஸ் அவர்களின் சிரேட்ட மாணவரும், சோட்டோகான் கராத்தே இன்டர்நஷனல் பெடறேசன் (வட இலங்கை) இன் தலைவர் சென்சேய் சதாசிவம் - தர்மராசா (2-ம் கறுப்புப்பட்டி) அவர்கள் கையளித்தார்கள். ஆணையாளர் செயலகத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பல கராத்தே வீரர்கள் கலந்து கொண்டார்கள். இக் கராத்தே சங்கத்தின் போஷகரான ஆணையாளர், இவ் வீரர்களிடையே உரையாற்றும் போது சமூக ஒழுக்கத்திற்காகவும், போலிகளை இனம் கண்டு சமூக சீர்கேட்டை களைவதற்கும் உழைக்குமாறு கேட்டுக் கொண்டதுடன் ஓர் தேநீர் விருந்தினையும் அளித்தார்கள். இப்புத்தகத்தின் பிரதிகள் திருநெல்வேலி (சந்தி) T. Y. M H. A. இல் விற்பனைக்குண்டு என்பதை அறியத்தருகின்றோம்

(9255)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



## மேஜா நெடுஞ்செழியன் ( றம்போ

(பாலசிங்கம் ரமணன்)

| | |
|---|---|
| தாயின்மடியில் | தாயகமண்ணில் |
| 21- 08- 1975 | 04- 08- 1994 |

தாயக மண்ணிற்காய் தன்னுயிரீந்த எங்கள் தனயனே! அண்ணனே! நிந்தன் வீரச்சாவு கண்டு நாம் கலங்கவில்லை. நீ என்றும் எங்களுடன் வாழ்வாய். உனது இலட்சியக் கனவு உனது தலைவனினதும் சக போராளிகளினதும் வீரத்தால் நிறைவு பெறும். இது உண்மை!

03- 09- 94-ல் எமது இல்லத்தில் நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் சக போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா,
தம்பியர்கள், தங்கை

காட்டுப்புலம்,
தொண்டைமானாறு.

(9224)

## மனித

எனினும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட பூச்சியத்துடன் கூடிய ஸ்தானமதிப்பு தசாம்ச எண்ணியல் முறையானது, மற்ற எண்ணியல் முறைகளை படிப்படியாக ஒதுக்கித்தள்ளி இன்று அநேகமாக உலகம் முழுவதிலும் பயன்படுத்தப் படுகிறது. சீனாவில் ஸ்தான மதிப்புடன் கூடிய தசாம்ச எண்ணியல் முறை ஆரம்பத்திலேயே சுயேட்சையாக தோன்றிய போதிலும் அம்முறையில் பூச்சியம் பயன்படுத்தப்படவில்லை. இன்றுநாம் பயன்படுத்துகின்ற எண்கள் இந்து-அரபு எண் வடிவங்களாகும். இவை பலர் மூலமும் உலகெங்கும் பரவியுள்ளன நாம் இன்று பாவிக்கும் எண்கள் அடி 10 ஐ கொண்டவையாகும். இவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 எனும் வரிவடிவங்களை கொண்டவையாகவும் ஸ்தானமதிப்பை கொண்டவையாகவும் உள்ளன கணனிகள் பற்றிய கற்கையில் ஈடுபடுவோர் அடி இரண்டைக் கொண்ட எண்கள், அடி எட்டைக் கொண்ட எண்கள், அடி பதினாறைக் கொண்ட எண்கள் என்பவற்றைக் குறித்து அறிந்து கொள்வர். இங்கு அடி இரண்டைக் கொண்ட எண்களுக்கு 1,0 எனும் இரு வரிவடிவங்கள் மட்டுமே உள, அடி எட்டைக் கொண்ட எண்களுக்கு 1, 2, 3, 4, 5, 6, 7,0 எனும் எட்டு வரிவடிவங்களும், அடி பதினாறை கொண்ட எண்களுக்கு 1,2,3,4.5,6,7,8,9,0 A, B, C,D,E,F என 16 வரிவடிவங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

-நன்றி : யுனெஸ்கோகூரியர்





''விலை குறைப்பு''

எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம், தலையில் தேய்த்துக் குளிப்பவையில் வேண்டும் அவதானம்.
இயற்கைச் சரக்குகள் மூலிகைகள் முந்தையோர் பாவித்தார் பலகாலம்.
இவை சேர்ந்த "ஒலிவ் ஸ்நானப் பவுடர்" எமக்காகும்.

பக்கற் ஒன்று விலை... ரூபா 2/50.
25 பக்கற் கொண்ட அட்டை ரூபா 50/-
"மில்க்வைற்"

(சி-10221)



## விற்பனை முகவர்கள் தேவை

மாதாந்த இதழ்களை வெளியிடும் பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு நடமாடும் விற்பனை முகவர்கள் தேவை. யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 19 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள், ஆண்கள் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்கள் நேரில்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 1994 - 09 - 10

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-
விளம்பர இல. 348
மே/பா ஈழநாதம் பணிமனை
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10177)


# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை கோவிந்தன்

(சிவலிங்கம் தெய்வேந்திரன்)

[அம்பாறை மாவட்டம்]

| | |
|---|---|
| தாயின் மடியில் | மண்ணின் மடியில் |
| 11-10-1973 | 02-09-1991 |

தமிழ் தாய் பெற்றெடுத்த தமிழ் வீரனே!
தம்பி கோவிந்தா !
அன்று உன் தளபதி தடுத்தும்
உன் வீரத்தை காட்ட மின்னல் மோதலில்
மின்னல் வேகத்தில் சென்றாய்
ஐயனே உன் வீர செயலை நாம் நேரில்அறியோம்
உன் உடலைக் கூட காணவில்லையே
கேட்டோம் செய்தி அறிந்தோம் உன் இறப்பு
துடித்தோம் குடும்பம் துணிந்தோம் அடுத்த வினாடி
இந்த மண்ணைக் காதலித்த மாவீரனே
உன் கனவு நனவாகும்
நிச்சயம் சுதந்திர தமிழீழம் மலரும்
அதுவரை உன் பணியை நாம் தொடர்வோம்.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் கலந்துகொள்ளும்படி சகபோராளிகள், உற்றார், உறவினர்களை அன்புடன்அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

ஐந்து சந்தி. மானிப்பாய் றோட்,
976, பள்ளிவாசல் அருகாமை லேன்
யாழ்ப்பாணம்.

(9263)


## போட்டோ அல்பம் இனாம்

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல். (சாம்பிள் பார்வையிடலாம்)
- கொம்யூட்டர் றபர்சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY). மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# (!) கொழும்பு கலைக்கூடம் (!)

(கொழும்பு ஸ்ருடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10219)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

★ பொருளாதாரத் தடை நீக்கம் ★ யுத்த நிறுத்தம்

# சந்திரிகா இறுதிவரை செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்குமா?

வடபகுதிக்கு எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்ட பொருள்கள் 28 மீதான தடையைநீக்க பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளமை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நல்லதொரு சமிக்ஞையே ஆகும். இத்தடைநீக்கமானது அரசியல் தீர்வு நோக்கிய முயற்சிக்கு எந்தளவிற்குப் பங்களிப்பைச் செய்யும் என்பதில் கேள்விகள் பல இருக்குமாயினும் குறிப்பிடக் கூடிய ஒரு முன்னேற்றம்என்றுகூறுவதில் தவறில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்படுவதற்கு முன்னோடி நடவடிக்கையாக இருதரப்பினருக்கும் இடையில் ஒரு பரஸ்பர நம்பிக்கையும், நல்லுறவும் ஏற்பட வேண்டும் என்பதோடு பேச்சுவார்த்தைக்கான ஒரு சுமுகமான சூழ்நிலையும் அவசியம் என்பது பொதுவாக எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும்.

இந்தவகையில் சிறிலங்காவின் புதிய பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா, தற்பொழுது எடுத்துவரும் நடவடிக்கைகள் முன்னேற்றகரமானவை என்றே கூற வேண்டும். அத்தோடு நிபந்தனைகள் அற்ற ரீதியில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வரவேற்கத்தக்கதாகும்,

இதேவேளை, இத்தடைநீக்கமானது,'வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கான ஆரம்ப நடவடிக்கை' எனப் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா குறிப்பிட்டமையும் ஓரளவு நம்பிக்கை அளிக்கும் விடயமாகவே உள்ளது. ஏனெனில் தற்பொழுது தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்களின் பட்டியலை நோக்கின் அவை தடைவிதிக்கப்பட்ட பொருட்களாக இருப்பினும் இவைவடக்கில் சிறிது அதிகரித்த விலையில் கொள்வனவு செய்யக்கூடியனவாகவே கடந்த காலத்தில் இருந்துள்ளன. இந்தவகையில் இப்பொருள்களின் தடை நீக்கமானது, முடங்கிப்போயுள்ள வடக்கின் பொருளாதாரத்திற்குப் புத்துயிர் ஊட்டக்கூடிய வகையாக இல்லை என்றே கூறமுடியும்.

ஏனெனில் தற்பொழுது தடை நீக்கப்பட்டுள்ள பொருள்கள் யாவும் உற்பத்திக்கு உதவக் கூடிய சக்திப் பொருளாகவோ அன்றி மூலப்பொருளாகவோ இல்லை. மண்ணெண்ணெய்விறகுஎன்பனசக்திப்பொருளாக இருப்பினும்அவை அன்றாட வீட்டுத் தேவைககான சக்திப் பொருளாக உள்ளனவே ஒழிய உற்பத்தி சார்ந்த சக்திப் பொருள் என்று கூறிவிடமுடியாது

இந்த வகையில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தடை நீக்கியுள்ள பொருட்களினால் மக்களின் பொருளாதார நெருக்கடிகள் தீருமா என்பதும் யுத்தச் சூழ்நிலையில்இருந்து விடுபட்டு மக்கள் சாதாரண வாழ்விற்குத் திரும்ப முடியுமா என்பதும் கேள்விக்குரியதாகவே இருக்கும்

அத்தோடு தடை நீக்கப்பட்ட பொருள்களின் பட்டியலில் போக்குவரத்து சாதனங்களின் மீதான தடையோ அன்றி, அவற்றிற்கான எரிபொருள் மீதான தடையோ நீக்கப்படவில்லை.

இந் நிலையில் தளர்த்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடையால் மக்கள் பெறும் பயன் மிகக் குறைவென்பதும் யுத்த காலத்தில் இருந்த அதே மாதிரியான போக்குவரத்து நெருக்கடிகளை மக்கள் எதிர்நோக்குவதும் தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும்.

அத்தோடு, குடாநாட்டிற்கான தரை வழிப்பாதைகள் மூடப்பட்டுள்ள இன்றைய நிலையில் இப்பொருளாதாரத் தடை நீக்கத்தினால் கிட்டும் பயன் மக்களுக்கு பெரியளவில் சென்றடையும் என்றும் கூறிவிட முடியாது.

ஆகையினால் பொருளாதாரத் தடை நீக்கம் என்பது, சகல பொருள்களுக்கான தடை நீக்கம் என்பதோடு மட்டுமல்லாது போக்குவரத்துப் பாதைகளைத் திறத்தல் என்பதோடு சம்பந்தப்பட்டதுமாகும்,

இந்நிலையில் சந்திரிகா குமாரணதுங்காவும் ஓரளவு உணர்ந்து கொண்டிருப்பதாகவே ஊகிக்க முடிகின்றது. இதன் அடிப்படையிலேயே, இனப்பிரச்சினை தீர்விற்கான பல்வேறு நடவடிக்கையில் ஆரம்ப நடவடிக்கை என்ற பிரதமர் சந்திரிகாவின் கூற்றுக்கு நாம் அர்த்தம் கூறவேண்டியுள்ளது.

இவ்விடயத்தில் மேலே குறிப்பிட்டது போன்று அர்த்தம் கொள்வது சரியானால் பிரதமர் சந்திரிகா இவ்விடயத்தில் இன்னும் நீண்ட தூரம் முன்னேற வேண்டிய தேவை உண்டு. ஆனால் இதில் அவர் எத்தனை தூரம் முன்னேறுவார் முன்னேற முடியும் என்பதற்கு உடன் பதில் கூறிவிடமுடியாது.

ஏற்கனவே, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கை இராணுவத் தரப்பில் சர்சைக்குள்ளாகியுள்ள ஒன்றாக மாறியுள்ளது. இராணுவத்தில் உள்ள ஒரு தரப்பினர், இதனை ஏற்கத் தயாராக இல்லைப் போன்று உள்ளது.

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவின் அரசியல் நிலைப்பாடு குறித்து இராணுவத்தரப்பில் இருந்து நல்ல சமிக்ஞைகள் தெரியவில்லை ஆரம்பத்திலேயே பொ. ஐ முன்னணியிடம் ஆட்சிப் பொறுப்பு கைமாறுவதைத்தடுக்கும் முகமாக இராணுவச் சதி முயற்சி ஒன்று மேற்கொள்ள திட்டமிடப்பட்டதாக தகவல்கள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. இது குறித்து விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன;

மேலும், பிரதி பாதுகாப்பு அமைச்சரான கேணல் அனுருத்த ரத்வத்த இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு இராணுவத்தின் சம்மதத்தைப் பெறுவதில் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியைத் தழுவியுள்ளதாக விமர்சகர்கள் கருதுகின்றார்கள். இந் நிலையிலேயே பிரதமமந்திரி சந்திரிகா குமாரணதுங்கா இவ்விடயத்தில் நேரடியாக இறங்கியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்;

இந் நிலையில், முற்றான பொருளாதாரத் தடைநீக்கம் என்பதை இராணுவத்தரப்பு ஏற்றுக் கொள்ளுமா? என்பது கேள்விக்குரியதே ஆனால் இராணுவம் இப்பொருளாதாரத்தடை விடயத்தில ஓரளவு ஒத்துப் போனாலும் யுத்தம் நிறுத்தம் தொடர்பான விடயத்திலோ அன்றி தற்பொழுது நிலை கொண்டுள்ள பிரதேசத்தில் இருந்தோ பெரும்பாலும் பின்வாங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்நிலையில் வடபகுதி மீதான பொருளாதாரத்தடை நீக்கப்படினும் யாழ். குடாநாட்டின் தரை வழிப் பாதைகள் மூடப்பட்டிருக்கும் என்ற நிலையில் இத்தடை நீக்கத்தால் மக்கள் அடையப் போகும் நன்மை சொற்பமாகவே இருக்கும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தமிழ் மக்கள் புதிய அரசாங்கத்தின் கொள்கையில் நம்பிக்கை வைப்பதற்கு சாதகமான சூழ் நிலை உருவாக மாட்டாது ஏனெனில்இராணுவத்தின்செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த முடியாத அரசாங்கத்தால், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது சாத்தியமாகுமா என்ற கேள்வியே எழும்பும்.

இதேசமயம், தமிழ்மக்கள் தரப்பில் இவ்வாறான கேள்வி எழும்புவதும், தாம் ஏமாற்றப்பட்டு விடலாம் என அஞ்சி தமிழ்மக்கள் ஐயுறவுடன் நோக்குவதையும் பொ. ஐ மு அரசாங்கம் குறைகூறிவிட முடியாது. ஏனெனில் கடந்த காலத்தில், தமிழ்மக்கள் சிங்கள ஆட்சியாளர் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு அவர்கள் விசுவாசமாக நடக்கத் தவறிவிட்டனர்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது மிகவும் சிக்கலான, நெருக்கடியான ஆபத்து நிறைந்தபாதையே ஆகும். இதனைப் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவால் தாண்டிவரமுடிந்தால் மட்டுமே அவரால் வெற்றி பெறமுடியும்;

ஏனெனில், இன்று யுத்தநிறுத்தம் பொருளாதாரத்தடை என்பனவற்றிற்கு இராணுவத்தின் ஒரு பகுதியினர் எதிர்ப்பது போன்று அரசியல் தீர்வு என்றால், சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த பிக்குகளும் போர்க்கொடி தூக்கமுடியும்

ஏற்கனவே இடம்பெற்ற சில சம்பவங்களில், பௌத்த பேரினவாதிகளுக்கு சந்திரிகா குமாரணதுங்கா சற்று வளைந்து கொடுத்துள்ளார் என்றே எண்ண வேண்டியுள்ளது. ஆனால் இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வில் அவர் வளைந்துகொடுத்தாலோ. அன்றிவிட்டுக் கொடுத்தாலோஇனப்பிரச்சினைக்குஒரு போதும் அரசாங்கத்தால்தீர்வு காணமுடியாது.

அதாவது இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது இலகுவில் எட்டிவிடக்கூடியதல்ல இதற்கு துணிவும். விடாமுயற்சியும் அவசியமாகும். இந்த நிலையில், சந்திரிகா குமாரணதுங்கா இதை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்? சவால்களை எப்படி தாண்டிவரப் போகிறார்? என்பதைப் பொறுத்தே இனப்பிரச்சினையின் எதிர்காலமும் இருக்கும்.

ஜெயராஜ்

---

முன்னாள் அமைச்சர்கள்

## பழைய ரயர் பொருத்தி வாகனங்கள் ஒப்படைப்பு

முன்னாள் அமைச்சர்கள் தங்கள் பாவனையிலிருந்த அரச வாகனங்களை ஒப்படைத்து வருகின்றார்கள் இவற்றில் பல பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்ட நிலையிலுள்ளன.

சில வாகனங்களில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி சாதனங்கள் கசட் றெக்கோடர்கள் என்பன அகற்றப்பட்ட நிலையில் காணப்பட்டன.

இவ் வாகனங்களின் பெறுமதி 5 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதாகும் இவ் வாகனங்களின் புதிய ரயர்கள் கூட அகற்றப்பட்டு பழைய ரயர்கள்பூட்டப்பட்டிருந்தன.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## விஞ்ஞான தொழில்நுட்ப துறையில் இந்தியா உதவும்

(கொழும்பு)

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் இலங்கைக்கு இந்தியா உதவவுள்ளது. வருடாந்தம் 50 இலட்சம் ரூபா வரையில் இவ் உதவி இருக்கும்.

ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் இந்தியா உதவவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காலநிலை மற்றும் செய்மதி தொடர்பிலும் இந்தியா உதவி புரியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்காட்சிப் போட்டி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு 05-9-1994 அன்று நடாத்தப்படவிருக்கும் கால்நடை கண்காட்சிப் போட்டிக்கான கால்நடைகளைப்பார்வையிடுவதற்கு 02-09-1994 இன்று கால்நடை வைத்தியர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் அடங்கிய குழு ஒன்று கால்நடை வளர்ப்போரில் கால்நடை கண்காட்சிப் போட்டிக்கு விண்ணப்பித்தவர்களது வீடுகளுக்குச் சென்று பார்வையிடவுள்ளனர். இதற்கேற்ப போட்டியாளர்கள் தங்கள் கால்நடைகளை வசதியாக காண்பிக்கும் வகையில் ஆயத்தங்களைச் செய்து ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் விண்ணப்பதாரிகளைக் கேட்டுக் கொள்கின்றனர்.

## யாழ். நூல் நிலைய எரிப்பு விசாரிக்க குழு வேண்டும்

தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து இலங்கை மக்களுக்கும் ஒரு பொக்கிஷமாகத் திகழ்ந்த யாழ்ப்பாண நூல்நிலையம் எரிக்கப்பட்டது குறித்து நிரந்தரமான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும் என்று நவசமசமாஜக்கட்சியின் அரசியல்துறை உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு பிரதமர் சந்திரிகாவைக் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் எழுதிய கடிதத்தில், லஞ்சம் ஊழல் குறித்து விசாரிக்கவும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மற்றும் லலித் அத்துலத்முதலி ஆகியோரது கொலை குறித்தும் விசாரிக்கவும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக 1981-ம் ஆண்டில் எரிக்கப்பட்ட யாழ். நூல்நிலையத்தையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்டது குறித்து ஆராய சுதந்திரமான ஆணைக்குழு ஒன்றினை நியமிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

## நல்லூரில் கலை விழா

நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்படும் கலை நிகழ்வுகளில் இன்று (2-9-94) 5 30 மணிக்கு தமிழீழத்தினை தெரிந்துகொள்ளுங்கள் வினாவிடை போட்டியில் பொருண்மியம் எனும் சிந்து நடைக்கூத்து, நவீன பொம்மலாட்ட நிகழ்வு, வீடியோ குறும்படக்காட்சி என்பன நடைபெறவுள்ளன.

தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

## இடைக்காலத் தீர்வை

வழ. இல: 01/94
தன்மை: பணம்

வழக்காளி:
யக்கோபிள்ளை கவுரியல்பிள்ளை
தொடுவாய் வாய்க்கால்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

எதிர்

எதிராளி:
இராசையா தவராசாசெட்டி,
மணியகாரன் சந்தி,
தும்பளை, பருத்தித்துறை.

1994ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி.

மேற்படி வழக்கு 1994ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி தமிழீழ மாவட்ட நீதியாளர் திரு. கோ. ஜனகன் அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளியின் சட்டவாளர் செல்வி கு. சந்தனா சமுகத்தில் கீழ்க்கண்டவாறு இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

1994ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6 ம் திகதி எதிராளிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டும் எதிராளி மன்றில் சமுகம் அளிக்கா தமையினால் ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளி சாட்சிகளின் சான்றுரைகளின் பிரகாரம் 1990ஆம் ஆண்டு வழக்காளியிடம் இருந்து எதிராளி கருவாடு வாங்கிய பணமான ரூபா 40,500/-ஐயும் வழக்குத் தீர்வைத் திகதி வரை வட்டியாக ரூபா 20,244/-ஐயும் எதிராளி வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என்றும் வழக்குக்கான நீதிமன்றச் செலவும் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இதன்படி இத்தீர்வை தொடர்பாக எதிராளியோ, எதிராளி சார்பில் அக்கறை உடைய எவரும் இன்றிலிருந்து 21 நாட்களுக்குள் இம்மன்றில் தோன்றி ஆட்சேபனை எதனையும் தெரிவிக்காவிடின் இத்தீர்வை முற்றுமுழுதாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பதிவாளர்

வழக்காளி சட்டவாளர். (9258)

## சமூக சேவையாளர்கள் தேவை

தகைமை: க. பொ. த. (சாதாரணதரம்) சித்தியடைந்திருக்க வேண்டும். 18 இலிருந்து 40க்கு இடைப்பட்ட வயதையுடைய சமூக சேவை வேலைகளில் ஆர்வமுடனும், அக்கறையுடனும் செயற்படத்தயாராக உள்ள பெண்கள் (மட்டும்) எவரும் விண்ணப்பிக்கலாம்.

சமூக சேவை நிறுவனங்களில் பணி புரிந்த அனுபவம் உள்ளவர்கள், சமூகசேவை தொடர்பான கல்வி, சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் எனில் மேலும் விரும்பத்தக்கது.

தொடர்புகட்கு:
பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்
வெய்யிலுகந்த பிள்ளையார் கோவில் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(9259)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
19. 12. 1919

இறப்பு
13. 9. 1993

திதி
2. 9. 94

### திருமதி நன்னித்தம்பி லீலாவதி

இம்மை வரை நீங்காது உங்கள்
இன் சொல்லும் கனிந்த பார்வையும்
எம்மை ஆளாக்கி வளர்த்த அன்புருவே
உம் நினைவில் நாளும் வாழுகின்றோம்

மருதடி வீதி, யாழ்ப்பாணம்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(9260)

## 31-ம் நாள்
### நீங்கா நினைவலைகள்



திரு. நாகலிங்கம் தர்மராசா
(நெல்லியடி டைமன் வெல்டேர்ஸ்)

அன்னைமடி: 23 - 07 - 1942
அரனடி: 03 - 08 - 1994

கங்கையங்கே ஊற்றெடுக்கச்
சற்றது. நீர் எங்களிடம்
பொங்கிப் பெருகிநின்ற
பாசமதைக் கண்டபின்பே

கண்ணீரின் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.


எம் குடும்ப ஒளிவிளக்கின் 31-ம் நாள் நிகழ்வை 02-09-94 காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் கொண்டாடுகிறோம். அந்நிகழ்விலும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கும்,

மனைவி, மக்கள், மருமகன், சகோதரர்கள்.

தோப்புவளவு,
நவிண்டில்,
கரவெட்டி.

(9249)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
21 - 07 - 1973

தாயக மண்ணில்
02 - 09 - 1990

### வீரவேங்கை மிரேஸ்
### [சிவலிங்கநாதன் சிவசங்கர்]

இளம் கன்றே சிவசங்கரே எம் இன்னுயிரே
ஈழத்து மண்ணையும் மக்களையும் காக்க என்று
ஓடினாய் முல்லைக்கு அன்று
தளம் கண்டாய் வீரம் காட்டினாய் வீரசொர்க்கம்
அடைந்தாய்
தன்னலமற்ற உன் தியாகத்தை நினைக்கின்றாள் தாய்
ஈழமாதாவும் இந்த நாளாம் ஆண்டில்.

முல்லையில் 02 - 09 - 90 அன்று சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் இவருடன் வீரச்சாவடைந்த வீரவேங்கைகள் அனைவருக்கும் எம் அஞ்சலி.

உன் பிரிவை என்றும் நினைக்கும்

கொத்தங்கலட்டி, வல்வெட்டித்துறை
அப்பா, அம்மா, தங்கை மற்றும் உறவினர்கள்

(9184)

## நல்லின கோழிகள்

யாழ். குடாநாட்டில் கால்நடைகளை விருத்தி செய்யும் முகமாக கோல்டன் கொமட் எனும் நல்லினக் கோழிகளை விருத்தி செய்யும் நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்தவகையில் தென்மராட்சி கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்திற்கு அருகாமையிலுள்ள பிருந்தாவனம் கூட்டுப் பண்ணையில் இவ்வின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இவற்றை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்து மக்களும் இவ் நல்லினக் கோழிகளை வளர்த்து பயன்பெறுவதற்கென இவ்வின கோழிகளின் அடை முட்டைகள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

எனவே இந்த அடை முட்டைகளைப் பெற்று பயன் பெற விரும்புபவர்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்மராட்சிக் கோட்ட, வட்ட செயலகங்களில் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## மாதாந்த ஒன்று கூடல்

நாளை சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். எனவே வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## தபால் விநியோகம்
(வடமராட்சி)

யாழ். தபால் திணைக்களத்திற்கு கொமாரி கப்பலில் எடுத்துவரப்பட்ட 445 தபால் பொதிகள் நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டன, இன்று முதல் தபால் விநியோகம் செய்யப்படும். (யோ)

## 31-ம் நாள் நினைவுகள்



தர்மகுலசிங்கம் அருந்தவராணி

மலர்வு: 12.5.75
உதிர்வு: 03.08.94

அன்பு தான் பார்வை
யாகும்
அமுதமே வார்த்தை
யாகும்.
நன்றிதான் செயலில்
வந்து
நானிலம்போற்ற
வாழ்ந்திர்
இன்பமே வாழ்வை
எண்ணி
இறையடி சென்ற
தேனோ?

சோபன் (சந்திரன்)
மற்றும்குடும்பத்தினர்

தகவல்: கி. கணேஸ்

(சி-10227)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# தேசியத் தலைவரின் வழிகாட்டலில் புதிய பரிணாமம் பெறும் கடற்புலிகள்

## கடற்புலிகள் சிறப்புத் தளபதி சூசை

(யாழ்ப்பாணம்)

எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் கடற்புலிகள் ஒரு புதிய பரிணாமத்தைப் பெறுகின்றார்கள். பல புதிய தொழில்நுட்பங்களை உபயோகித்து படகைச் செலுத்தக்கூடிய நிலை இன்று உருவாகியுள்ளது.

இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் நேற்று மாலை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற 'கடலில் காவியம் படைப்போம்' என்ற ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசும்போது குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது,

1984 ஆம் ஆண்டிலிருந்து தான் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளாகிய நாங்கள் எமக்கென ஒரு சொந்தப் படகை எடுத்து அதில் பயணம் செய்ய ஆரம்பித்தோம்.

ஆனால், 1976 ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ தேசியத் தலைவர் அவர்களையும் எமது முன்னாள் தளபதிகளையும் கடலோட்டிகள் தான் ஏற்றிக்கொண்டு சென்றார்கள்.

இவர்கள் 1976ஆம் ஆண்டில் இருந்து சகல நடவடிக்கைகளிலும் பங்கெடுத்து படகோட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் வளர்ச்சிக்கும் வழி கோலியவர்கள்.

இன்று எமது கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையால் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். நேற்றைய தினம் கூட பருத்தித்துறைக் கடற்பரப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய பாதுகாப்பு வலயத்திற்குள் அதாவது- பருத்தித்துறையில் கப்பல் தரித்து நின்று உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கின்ற வேளையிலும் கூட சிறிலங்கா கடற்படை உள் நுழைந்து ஒரு மீனவரைக் கைது செய்து மற்றொருவரைப் பீரங்கியினால் சுட்டுக் கொன்றுள்ளது.

இத்தகைய நிகழ்வு இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதுபோன்று கிழக்கிலும் பல நிகழ்வுகள் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஏராளமான தமிழ் மக்கள் இந்தக் கடல்நீரேரியிலும் இந்தக் கடலிலும் இன்றும் இறந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய அவலங்களை தாங்கி இவர்களுக்குச் சமர்ப்பணமாகத்தான் இந்த ஒலிப்பதிவு நாடா விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினால் உருவாக்கம் பெற்று இன்று உங்களுக்காகத் தரப்படுகின்றது.

1984ஆம் ஆண்டு புதுவருட தினத்தன்று. யாழ் கோட்டை பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் காயமடைந்த போராளிகளைஇந்தியாவிற்கு சிகிச்சைக்காககொண்டுசெல்ல வேண்டியநிலை. அத்தகைய சூழ் நிலையில் மனைவியையோ தன்னுடையபிள்ளைகளையோ கருத்தில் கொள்ளாமல் அன்று வடமராட்சி கிழக்கில் உடுத்துறைப் பகுதியில் இருந்து காயமடைந்த போராளிகளையும் பயிற்சிக்குரிய போராளிகளையும் அழைத்துச் சென்றவர் தான் கடலோடிய கணேஷ்மாமா. அந்தப் பயணத்தைத் தொடர்ந்த வேளையில் சிறிலங்கா கடற்படையால் அவர்களுடைய படகு நீர்மூலமாக்கப் பட்டது. அந்த நிகழ்வில் சில கடலோடிகளும், கடலோடிகளுக்கு பக்கபலமாக இருந்த கடற்புலிகளும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

இப்பாடல்கள் மூன்று மாதங்களுக்கு முன்னரே உருவாக்கப்பட்டது. இந்த ஒலிப் பதிவு நாடாவை வெளியிடும் போது அந்தப் பாடலில் கூடுதலான கருத்துக்கள் கடலிலேயே காவியம் படைப்போம், எதிரியை முறியடிப்போம் என்ற பதங்களை உள்ளடக்கியிருந்ததினால் ஒரு வரலாற்றுச் சாதனையின் பின்னர்தான் இந்த பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியில் வரவேண்டும் என்பது எமது தலைவரின் அவா! இன்று அந்த வரலாற்றுச் சாதனையை படைத்து வீர காவியம் படைத்தார் மகளிர் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி அவருடைய மகத்தான சாதனையை அடுத்துத்தான் இன்று இந்த ஒலிப்பதிவு நாடா உங்களுக்காக உங்கள் கைகளில் தவழவிடப் படுகின்றது.

தலைவரின் சிந்தனையில் உதித்ததுதான் கரும்புலிகள் கடல் நீரேரியில் பயன்படுத்திய குருவிப்படகு, இந்தப் படகின் உருவாக்கம் கண்டு பயன்படுத்தி படகின் வடிவமைப்பிலிருந்து செலுத்தப் படும் வரை ஒன்றிணைந்து நின்று இதற்கென பெரும் நேரத்தை ஒதுக்கி உருவாக்கத்திற்கான கருத்துக்களை வழங்கி இதனைச் செலுத்தி ஒரு வரலாற்று நிகழ்வைப் படைப்பதற்கு வழிகாட்டியாக நின்ற எமது தலைவரின் உருவப்படத்தினை அட்டைப்படமாக தாங்கி இந்த ஒலிப் பதிவு நாடா வெளிவருகிறது என்றார்

---

### புலிகளுடன்

நான்கு வருடகாலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றிய இராணுவ அதிகாரிகளுடன் எந்த ஒரு அரசியல் தலைவரும் நேரடி தொடர்பு கொண்டிருக்கவில்லை என படை அதிகாரிகள் சுட்டிக்காட்டியதை தொடர்ந்து இதே போன்ற பேச்சுவார்த்தைகள் எதிர்காலத்தில் தொடர்ந்து நடைபெறும் என பிரதமர் உறுதியளித்துள்ளார்

### யுத்த

பெற்ற விசாரணை குழுவை முற்றாக விலக்கிக்கொள்வது போன்ற நடவடிக்கைகள் வடக்கு கிழக்கு இராணுவ முகாம் விஜயம், இராணுவ குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்போன்றவை இடம்பெற்று வருவதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. [நி]

### இராணுவ

இச்சந்திப்பில் கலந்து கொண்டார்- போர் நிறுத்தம் தொடர்பாகவும், காவலிலுள்ள கைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும். இச்சந்திப்பில் ஆராயப்பட்டது- புலிகளின் கருத்தை அறிவதற்காக காத்திருப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது-

இச்சந்திப்பில் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், படைத்துறை உயரதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு, உயரதிகாரிகள். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### கடற்புலிகள்

படையின் தாக்குதலில் 1984 ஆம் ஆண்டு புதுவருட தினத்தன்று கடலில் வீரச்சாவடைந்த கணேஸ் மாமாவின் மனைவி அவர்களும் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்களும் ஒலிப்பதிவு நாடாவைப் பெற்றுக் கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை அவர்கள் அங்கு உரையாற்றினார். பின்னர் இந்த ஒலிப்பதிவு நாடா உருவாக்கத்தில் ஈடுபட்ட கலைஞர்களுக்கு பரிசு வழங்கி அவர் கௌரவித்தார்.

திரு. வீரமணிஐயர், பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் மதிப்பீட்டுரை ஆற்றியதை அடுத்து மு வே.யோ. வாஞ்சிநாதன் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் பத்தாவது வெளியீடான இது கணனியின்உதவியுடன் ஒலிப் பதிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(தி).(பா)

### தபால்கள்

ஏற்றிச் செல்ல மறுத்ததால் பொதிகள் துறைமுகப் பகுதியில் காணப்பட்டன.

காங்கேசன்துறையில்தபால் பொதிகளை படையினர் கண்ட கண்டபடி வெட்டி நிலத்தில் தபால்களைக் கொட்டி சோதனை செய்வதாகவும், பின்னர் வெவ்வேறு தபாலகங்களுக்குபிரிவு பிரிவாகக் கட்டப்பட்ட தபால்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவதாகவும் இச்செயலினால் தபால்பொதிகளைதிருகோணமலை தபாலகப் பிரிவில் பாரப்படுத்துவதில் ஏற்படும் கஷ்ட நிலையினால் தபால் பொதிகளை எடுத்துச் செல்ல கப்பல் கப்டன் மறுத்துள்ளார். [யோ

### சந்திரசேகர

மக்கள் விடுதலை முன்னணியின் ஆரம்பகால உறுப்பினர்களான அத்துலநிமலசிறி ஜெயசிங்க, மகிந்த விஜயசேகர ஆகியோரும் பிரதி அமைச்சர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்

பேராதனை பல்கலைக்கழக அரசியற்பீட பேராசிரியரான பேராசிரியர் விஸ்வ வர்ண பாலவும், மொழியியலாளரான பேராசிரியர் ஏ விசுரவீர, பிரபல திரைப்பட நடிகர் ஜீவன் குமாரதுங்க ஆகியோரும் அமைச்சரவையில் இடம்பெறுகின்றனர்

புதிய அரசின் அமைச்சரவையில் மிகவும்வயது குறைந்த அமைச்சராக செல்வி பவித்ரா வன்னியாராய்ச்சியும் நேற்று பிரதிஅமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்

### பட்டதாரி

தில் உடனடியாக எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

---

# மேலும்சில பொருள்களுக்கு தடையை நீக்கலாம்

## படை அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

மேலும் சில பொருள்களுக்கு அரசாங்கம் தடையை நீக்க முடியும் என்றும் எனவேஇதனை பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா விரைவில் செய்ய வேண்டும் என வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமைபுரியும் சிறிலங்கா உயர்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற முப்படைத் தளபதிகள் பொலிஸ் மா அதிபரின் சந்திப்பின் பின்னர்நடைபெற்ற வடக்கு கிழக்கு பாதுகாப்பு அதிகாரிகளுடனான கலந்துரையாடலிலேயேஇக்கருத்தை படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்-

இம் மாநாட்டில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையும் உடன் இருந்தார் சுமார் நான்கு மணி நேரம் இப் பேச்சு வார்த்தை நடைபெற்றது-

இம் மாநாட்டில் நீண்ட நேரம் வடக்கு கிழக்கு நிலைமை தொடர்பாகவே ஆராயப்பட்டது- பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நேற்று முன்தினம் வெளியிட்ட சில பொருள்கள் மீதானதடை நீக்கம் தொடர்பாக தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் எனவே பொருள்கள் இருபத்தியெட்டின் தடை நீக்கப்பட்டால் காணாது என்றும் இன்னும் பொருள்களின் தடையை நீக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்-

தமது முழுமையான ஒத்துழைப்பை சமாதான முயற்சிக்கு வழங்க படையினர் தயார் என்றும் எந்த ஒரு நிலையிலும் சமாதான முயற்சிக்கு படையினர் இடையூறாக இருக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

# வெளிச்சம் ஆவணி இதழ் இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் ஆவணிமாத இதழ் சிறுகதைச் சிறப்பிதழாகஇன்று வெளிவருகின்றது

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய 'நான் ஒரு கனவு காண்கிறேன் அது நனவாக வேண்டும்' என்ற கருத்துரையுடன் அதிக பக்கங்களுடன் வெளிவரும் இந்த இதழ் வெளிச்சத்தின் இருபத்தெட்டாவது இதழாகும்.

---

### இன்றைய

ஆனால் எந்தக்காரணத்தைக் கொண்டும் தற்பொழுது இராணுவம் இருக்கும் நிலையில் இருந்து பின்வாங்கப் போவதில்லை எனவும் தெரிவித்தனர்-

மேலும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மேற்கொண்ட அரசியல், இராணுவ தலையீடுகள் காரணமாக இராணுவத்தினரும் பொலிசாரும் கடந்த காலத்தில் பல இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது எனவும் அவ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடபகுதிக்கு போக்குவரத்து பாதையொன்றை திறப்பதற்கு பிரதமர் எண்ணுவதாக அவரது நடவடிக்கை மூலம் அவதானிக்கக்கூடியதாக இருப்பதாகவும் இப்பாதை அனேகமாக பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையாகவே இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்

17. 11. 1975

தமிழீழ மண்ணில்

02. 09. 1990



**வீரவேங்கை சின்ன அக்காச்சி**

**(பஞ்சலிங்கம் தயானந்தன்)**

நீர்வைதனை பாசத்தின் பிறப்பிடமாக - கொண்ட
சிரிக்க வைத்த சித்திரமே - சின்ன அக்காச்சி
ஈழமண்ணை மீட்க புறப்பட்டாய் நீ
விழியதில் தேக்கிய ''ஈழக்கனவுகள்''
விரைவாய் உதிக்கையில்
வழிமேலே விழிவைத்துக் காத்திருந்த ஈழமது
வழியதுவே கலங்கிட மாவீரனாய் வந்தாய்.
ஆண்டு நான்கு கடந்தாலும்
உன் நினைவலைகள்
ஓயாது ஒலிக்கும் எம் நெஞ்சங்களிலே.

சின்ன அக்காச்சி வீதி, நீர்வேலி தெற்கு.

உன் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

(10226)

# சொந்த நாட்டிற்குள் ராணுவம் யுத்தம் புரிவதை அனுமதிக்க முடியாது

**- கேணல் அனுருத்த ரத்வத்த**

ஒரு நாட்டு இராணுவம் எதிரிகளோடு யுத்தம் செய்யலாம். ஆனால் தனது சொந்த நாட்டிலேயே யுத்தம் செய்வது அனுமதிக்கக்கூடியது அல்ல. அதிலும் அப்பாவிப் பொதுமக்கள்மீது விமானத் தாக்குதல்களை நடத்துவதையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது இதுவரை காலமும் விமானத் தாக்குதலாலும் ஷெல் தாக்குதலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து எதிர்காலத்தில் ஆராயப்படும்.

கிளாலி பாதையை சட்டபூர்வ போக்குவரத்துப்பாதையாக அங்கிகரிப்பது குறித்து நாம் இதுவரை தீர்மானிக்கவில்லை. கிளாலி பாதை போல் சங்குப்பிட்டி - கேரதீவு பாதையும் ஆனையிறவு ஊடான வவுனியா-யாழ்ப்பாணம் பிரதான பாதையும் இருக்கிறது. கூடிய விரைவில் வடபகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கவே திட்டமிட்டுள்ளோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழ் வாலிபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்- இவர்களின் விபரங்களை உடனடியாக சமர்ப்பிக்கும்படி பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா எனக்கு உத்தரவிட்டுள்ளார். அவர்கள் பற்றிய விபரங்கள் இப்போது துரிதமாக சேகரிக்கப்படுகின்றன. குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்கள் உடனடியாகவே விடுதலை செய்யப்படுவார்கள். குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படுவார்கள்-

கடந்த காலங்களைப்போல் கொழும்பு நகரில் பொலிஸ் கெடுபிடிகள் இருக்காது. அந்தநாட்களில் நாங்கள் கூட கொழும்பில் நடமாட முடியாத நிலைமை இருந்தது.

அரசு-புலிகள் பேச்சுக்கு இடைத்தரகர்களோ, மத்தியஸ்தர்களோ தேவையில்லை. எமது நாட்டு மக்களுடன் பேச என்ன மத்தியஸ்தம் வேண்டிக்கிடக்கிறது?

வடபகுதி உணவுப்பொருள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க, தாண்டிக்குளம் ஊடாக, உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல இருந்த கட்டுப்பாடுகளையும் தளர்த்தி இருக்கிறோம் என்றார்.


யாழ். ஸ்ரீதர் அகல வெண்திரையில்...

தினசரி காலை 10.30 மணிக்கு

**WAY OF THE DRAGON**

[கராட்டி]

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

**CIRCUS**

உதைபந்தாட்ட ரசிகர்களுக்காக ..

சனி, ஞாயிறு பி.ப. 2.15 மணிக்கு

**SOCCER WORLD CUP - 1994**

**BRAZIL VS ITALY - FINAL**

உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 1994

பிறேசில் எதிர் - இத்தாலி - இறுதி ஆட்டம்

(10230)



யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பதவி வெற்றிடம் - 01

1. காரியாலய உதவியாளர்

சம்பள இல:-
165/88-16,-700-15×10-20×5-950

கல்வித் தகைமைகள்:-

(அ) ஐந்தாம் வகுப்பு சித்தியுடன், கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) எட்டாம் வகுப்பு சித்தியெய்திய கல்வித் தராதரப்பத்திரம் உடையவர்.

மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 18-40 வயதிற்கும் இடைப்பட்டவர் ஆக இருத்தல் வேண்டும்.

சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது. கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவர்கள் தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
இப்பதவிக்கான விண்ணப்பங்கள் யாவும்

தலைவர்
யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி
சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவு
சங்கங்களின் சமாசம்,
இல. 111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:-
12-09-94ந் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்பு.

(10228) "தலைவர்"


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஒட்சிசன் வந்தது

யாழ். போதனா வைத்திய சாலைக்கு நேற்று ஐம்பது ஒட்சிசன் வாயு சிலிண்டர்கள் வந்து சேர்ந்தன.

இதன் மூலம், போதனா வைத்திய சாலையில் நிலவிய ஒட்சிசன் வாயுவிற்கான பற்றாக்குறை நீங்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

சமீபகாலத்தில் ஒட்சிசன் வாயு தட்டுப்பாட்டினால் நோயாளர் பலர் பாதிப்படைந்தது குறிப்பிடத்தக்கது.

நேற்று பருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்து சேர்ந்த பிளம்பயன் கப்பலிலேயே இந்த சிலிண்டர்கள் எடுத்து வரப்பட்டன. (தி) (பா)

## இளைஞர் பலி

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஒரே ஊரைச்சேர்ந்த இரு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலொன்றின் போது ஓர் இளைஞர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானார்.

## ஒன்று கூடல் ஒத்திவைப்பு

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை சனிக்கிழமை நடைபெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஒன்று கூடலுக்கான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 09 - 02**
**வெள்ளி இரவு**

08.01 - கலைமஞ்சரி-நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம் "வானோசை சஞ்சிகையின் ஜூலை, ஓகஸ்ட் மாத இதழ்" அதனையடுத்து- சிறுகதை "பயணம்" சிறுகதையைஅடுத்து "கரும்புலி" - கவிதை
08.25 - கணப்பொழுது
08.30 - செய்திகள்.
08.40 - அரசியல் அரங்கம்" அருகிலிருப்பதால் அடிபணிய வேண்டுமா?"

**1994 - 09 - 03**
**சனி காலை**

07.02 மாவீர வணக்கம்
07.15 - நீங்கள் கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## 24 பிரதி அமைச்சர்கள் நேற்று பதவி ஏற்பு

(கொழும்பு)

நேற்றுக்காலை 24 பிரதியமைச்சர்கள் ஜனாதிபதியின் முன்னிலையில், பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்கள் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் இவர்களில் மூவர் பெண்களாவர் பிரதியமைச்சர்களின் விபரம் வருமாறு,

★ வெளிநாட்டு வர்த்தகம் நீதி, அரசியல் யாப்பு விவகாரம் - பி. பி. ஜி. களுகல்ல
★ வெளிவிவகாரம் - டி. பி. விக்கிரமசிங்க
★ விவசாயம் காணி வனவளம் - சமரவீர வீரவன்னி
★ பொது நிர்வாகம், பாராளுமன்ற அலுவல்கள் பெருந்தோட்ட தொழில் துறை - அத்தாவுட செனவிரத்ன
★ தொழில், தொழில் பயிற்சி - மொன்றி கோபல்லவ
★ கப்பல் போக்குவரத்து துறைமுகங்கள் புனர்வாழ்வு புனர்நிர்மாணம் - மகிந்த விஜயசேகர
★ பௌத்த சாசனம் - திருமதி சுமேத்த- பி- ஜெயசேன
★ நிதி, திட்டமிடல் இன விவகார தேசிய நல்லிணக்கம் - ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே
★ போக்குவரத்து நெடுஞ்சாலைகள் சுற்றாடல் மகளிர் விவகாரம் - நந்தமித்திர எக்கநாயக்க
★ தபால் தொலைத்தொடர்புகள் - எம். சி. ஏ. எம் ஹிஸ்புல்லாஹ்
★ நீர்ப்பாசனம் - மைத்திரிபால சிறிசேன
★ கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி - மில்ரோய் பெர்ணாண்டோ
★ விஞ்ஞானம் தொழினுட்பம் மனிதவள அபிவிருத்தி - ஜனாப் எஸ். எஸ். எம் அபூபக்கர்
★ கைத்தொழில் அபிவிருத்தி - போட்டி தசநாயக்க
★ வீடமைப்பு நிர்மாணத்துறை பொது வசதிகள் - எஸ். பி நாவின்ன
★ தகவல் துறை - ஜனாப் எஸ். எம். அலவிமௌலானா
★ இளைஞர் விவகார, விளையாட்டு கிராமிய அபிவிருத்தி - ஜீவன் குமாரதுங்க
★ உள்நாட்டு விவகாரம், மாகாணசபைகள், கூட்டுறவுத்துறை - சந்திரசிறி கஜதீர
★ வர்த்தகம், வாணிபம், உணவு - பி. சந்திரசேகரன்
★ மின் சக்தி எரிபொருள்துறை - அத்துல நிமலசிறி ஜெயசிங்கா
★ சுற்றுலா விமானப் போக்குவரத்து - திருமதி நிருபமா ராஜபக்ச
★ சுகாதாரம், சமூகசேவைகள் - செல்வி பவித்ரா வன்னியாராய்ச்சி
★ கல்வி, உயர்கல்வி - பேராசிரியர் விஸ்வவர்ணபால
★ கலாசாரம், மதவிவகாரம் - பேராசிரியர் ஏ. வி. சுரவீர.

## பலாலி வந்த டாங்கிகள் மீண்டும் திருமலைக்கு

(கொழும்பு)

அண்மையில் பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்ட யுத்த தளபாடங்கள் அங்கிருந்து திருப்பிக் கொண்டுவரப்படுவதாக இராணுவ வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இரண்டு யுத்த டாங்கிகள் கப்பல் மூலம் பலாலியிலிருந்து திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன, தேர்தலுக்கு முன்னதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் ரஷ்ய கம்பனிஒன்றிடமிருந்து அவசர அவசரமாககொள்வனவு செய்த பெருமளவான இராணுவ தளபாடங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு சந்திரிகா குமாரணதுங்க உத்தர விட்டுள்ளமை தெரிந்ததே.

## ஜனாதிபதி முறையை ஒழிக்க அரசியற்கட்சிகள் சந்திப்பு

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதுபற்றி நாளை மறுதினம், அரசியற் கட்சிகளின் கூட்டமொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது, உண்மையான பாராளுமன்ற அதிகாரத்தைப் பெறுவதற்கு சகல கட்சிகளின் ஆதரவும் கோரப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது-

## மரண அறிவித்தல்

**காளிமுத்து சூசைப்பிள்ளை பாக்கியநாதர்**

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சூசைப்பிள்ளை பாக்கியநாதர் காலமாகிவிட்டார். இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் இளைப்பாறிய ஊழியரும், பிலோமினாவின் அன்புக் கணவரும், திருமதி திரேசா (இத்தாலி), திருமதி றீற்றா (ஜேர்மன்), திருமதி ராணி (இத்தாலி) திருமதி அலெக்ஸ் சந்திரா (நகரசபை பருத்தித்துறை), செல்வி மார்க்கிரட், செல்வி யோசப்பீன், செல்வி யோஸ்லீன் (இத்தாலி). செல்வி ராஜினி (இத்தாலி) செல்வி ஜசிந்தா (ஆசிரியை றோ. க. த. க வித்தியாலயம், பண்டத்தரிப்பு), செல்வன் யேசுதாஸன் (ஜேர்மன்), காலஞ்சென்ற அன்ரனி செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. ஸ்ரீவீரகனககுமார், திரு. யேசுராசா (ஜேர்மன்), திரு. மரியதாஸ் (இத்தாலி), திரு. அன்ரன் குருநாதன் (பருத்தித்துறை), ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலோஜினி, டினேஸ், டிராஜ் ஆகியோரின் அருமைப்பாட்டனாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று (2-9-94) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பண்டத்தரிப்பு சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பற்றிமா கோவில் வீதி,
பண்டத்தரிப்பு.
(9262)

தகவல்:
மார்க்கிரட் பாக்கியநாதர்
(மகள்)